ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்:—திவான் பகதூர் டி. டி. ரங்காசார்யர், பி.ஏ., பி.எல்.

ஸம்புடம் 7.] நள ௵ மார்கழி ௴ [ஸஞ்சிகை 3.

த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் தததாநே - வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே ரதிரஸ்து மேऽநவத்யா ॥ [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

## பத்ராதிபரின் குறிப்புகள்.

**தநம் மோக்ஷ விரோதியா?**

"ஒட்டகம் ஊசியின் காதுக்குள் நுழைந்து வெளிப்பட்டாலும் படலாம்; பணக்காரன் மோக்ஷஸாம்ராஜ்யத்தை அடையமாட்டான்." என்று சொன்னாராம் கிறிஸ்து. இதனால் பணக்காரனுக்கு மோக்ஷப்ராப்தியில்லையென்று கருத்து. ஆனால், லோகத்தில் பகு தநவந்தர்கள் புண்ய க்ருத்துக்களாயும், பகவத் பக்தராகவும் இருந்தார்கள். இவர்களுக்கு மோக்ஷமில்லையெனக் கூடுமா? த்யாகத்தின் பொருட்டு ரகுகுல மன்னர்கள் அர்த்தார்ஜநம் செய்தார்களென்றும், அவர்கள், வார்த்தகம் வந்த பின்பு மாந ஶீலர்களாய் நின்று யோகத்தால் முடிவில் சரீரத்யாகம் செய்தார்களென்றும் காளிதாஸ மஹாகவி சொன்னது பொய்யாகுமோ?

தநமே மோக்ஷப்ராப்தியைத் தடுக்காது. ப்ராயேண ஜநங்கள் தம்முடைய ஆத்மாவிற்கு ஶ்ரேயஸ்ஸைத் தேடுவதை மறந்து,

சரீராபிமாநிகளாய்ப் போந்து, சரீரங்கட்கு ப்ரியத்தைத் தேடு கின்றனர். இப்படி ப்ரியங்களைத் தேடி யநுபவிக்கப் பொருள் உதவி செய்கின்றமையால், பொருளுடைய கார்யத்தை உத்தேசித்துப் பொருளைத் தூஷித்ததென்னலாம்.

இந்த விஷயத்தை, 'அஸத: ஶ்ரீமதாந்தஸ்ய தாரித்ர்யம் பரமாஞ்ஜநம்' எனும் ஸ்ரீ க்ருஷ்ண வசநம் தெளிவாய்ச் சொல்லுகின்றது. பணக்காரன் ஸ்ரீமத மெனப்பட்ட செல்வச் செருக்கைப் பாராட்டினுைகில், அவனைக் குருடன் என்று ஸ்வாமி வெளியிட்டார். அவனுக்கு ஜ்ஞாந சக்ஷுஸ் இல்லை; ஆத்மாநாத்ம விவேகமில்லை; ஈஶ்வராஸ்தித்வத்தை அவன் அநுஷ்டாநத்தில் காட்டுவதில்லை. அந்த ஜ்ஞாநக் குருடன் அஸத் எனச் சொல்லப்பட்டது ஏனென்ருல்:—'அஸந்நேவ ஸ பவதி-அஸத் ப்ரஹ்மேதி வேத வேத்' [அதாவது, ப்ரஹ்மாஸ்தித்வத்தை எவன் அறியவில்லையோ அவன் அஸத்தே] என்று உபநிஷத் கூறியது. ஆதலால் அவனை ஒரு வஸ்துவாகத் தத்வதர்சிகள் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். ப்ரஹ்மாஸ்தித்வத்தை அறிந்தவனைப்பற்றி, 'அஸ்தி ப்ரஹ்மேதி சேத் வேத ஸந்தமேநம் ததோ விது:' என்று உபநிஷத் கூறியது. அவன் தான் ஸத். அவனுக்குத் தான் ஆத்மஸத்தை உண்டு. ப்ரஹ்மாஸ்தித்வத்தை அறிந்தவன் யாவன்? ஸங்கேதத்திற்காக ப்ரஹ்மத்தை ஒப்புக்கொள்கின்றவன் அல்லன். பரர் சொல்கின்ருரென்று ஒப்புக்கொள்கின்றவனல்லன். எல்லா மதங்களும் சொல்கின்றமையால், அவற்றில் ஒன்றையும் நம்பாமல், ப்ரஹ்மம் மாத்ரம் உண்டெனச் சொல்கின்றே னென்று, சில நூதந ஸமாஜத்தாரை யொத்துச் சொல்பவனல்லன். Philosophers எனப்பட்ட தத்வ விமர்சிகள் 'ப்ரஹ்மம் இருக்கலாம், இருக்கத்தான் வேண்டும்' என்கின்ருர்கள்; ஆதலால் 'நானும் ப்ரஹ்மத்தை ஒப்புக்கொள்கின்றேன்', என்று புதுக் கோட்பாடுகள் செய்பவரும் அல்லர். 'ஶாஸ்த்ராச்ச வேத்மி ஜநார்தநம்' என்று ஸஞ்ஜயன் சொன்னபடியே, ஶாஸ்த்ரம் காட்டின வழியே ப்ரஹ்மத்தை யறிந்து, ஶாஸ்த்ரம் இட்ட கட்டளையில் ப்ரஹ்மோபாஸ்தி செய்பவன்தான் ப்ரஹ்மாஸ்தித்வத்தை அறிந்

தவன். மற்றவர்களுக்கு ப்ரஹ்மாஸ்தித்வ விஷயத்தில் ப்ரமாண மில்லை. ஜ்ஞாநம் என்பதைப்பற்றி நிரூபிக்கு மிடத்து, ஸ்ரீ விஷ்ணு புராணம் ஶாஸ்த்ரத்தால் ப்ரஹ்மத்தை அறிந்து, யோகத்தால் தர்சித்துப் பக்தியால் அடைய வேண்டு மெனச்சொல்லி, இம் மூன்று ப்ரவ்ருத்திகளுக்கும் ஸாதநங்களாக நிற்கின்ற ஜ்ஞாநமும் யோக ஸாக்ஷாத்காரமும் பக்தியும் சேர்ந்துதான் ப்ரஹ்மத்தை அறிவதாகும் ஜ்ஞாநமென்று சொல்லிற்று.

இப்படிப்பட்ட ஜ்ஞாநத்தை அடைவதற்குத் தநம் தடையாய் நிற்கின்றது. பணக்கொழுப்பு உள்ளவனுக்குத்தான் அது அவ்வண்ணம் தடையாகும். அவன்தான் ஜ்ஞாந ப்ராப்தி விஷயத்தில் பிறவிக் குருடன். அவனை ஒரு வஸ்துவாகத் தத்வதர்சிகள் அங்கீகரிக்கமாட்டார்கள். அவனுக்குத் தான் தாரித்ரியம் கண் திறக்கும் மையை யொத்த தெனச் சொல்லப்பட்டது. செல்வ முடையவன் பகவத்பக்தனுகில், அவனைப் பகவான் மிகவும் ஶோதிப்பர். அவனை அநுக்ரஹிக்கத் திருவுள்ளம் பற்றும்போது, 'யஸ்யாநுக்ரஹ மிச்சாமி தஸ்ய வித்தம் ஹராம்யஹம்' [அதாவது, எவனை அநுக்ரஹிக்க இச்சிக்கின்றேனே அவனது செல்வத்தைப் போக்குவேன்] என்கிறபடியே, முதலில் அவன் தநத்தை ஹரிக்கின்ருர். இதனுல் அநுக்ரஹ பாத்ரமானவனுக் கெல்லாம், தநநாசம் நியத மென்று கொள்ளக்கூடாது. தநம் எவன் பக்திக்கு ப்ரதிபந்தகமாகுமோ, எவனுக்கு அதனுல் ஸாதிக்கத்தக்க ப்ரிய வஸ்துக்களிடம் சாபல்யம் நீங்கியிலதோ, அப்படிப்பட்டவன் விஷயத்தில் தான் இந்த ஸங்கல்பம் அந்வயிப்பது. கேஶித்வஜ ஜநகன் மஹாப்ரஹ்மவித்தாக இருந்து ராஜ்யம் ஆண்டார். குலசேகரன் பகவானைத் தவிர மற்றெதிலும் பற்று நீங்கி யரசும் ஆளவில்லையா? அப்படிப்பட்ட அதிகாரிகள் விஷயத்தில் தநம் பகவத்ப்ராப்தி விரோதி யன்று. அந்ய அதிகாரிகள் விஷயத்தில் தநநாசம் பகவானுல் ஸங்கல்பிக்கப்பட்டது. "தேஷாமேவாநுகம்பார்த்த மஹமஜ்ஞாநஜம் தம: । நாஶயாம்யாத்மபாவஸ்தோ ஜ்ஞாநதீபேந பாஸ்வதா ॥" என்கிறபடியே, பகவானைப்பற்றி ஒருவர்க்கொருவர் சொல்லிக்கொண்டும்,

பகவத் கதைகளைத் திநம் கேட்டுக்கொண்டும், உள்ளும் புறமும் ஆநந்தம் பெருகப் பகவதநுபவம் செய்யும் பகவத்தைக சித்தர்கள் விஷயத்தில் பகவான் மிகவும் க்ருபைகூர்ந்து, அவர்கள் ஹ்ருதயத்தில் நின்று, அவர்களுடைய அஜ்ஞாநமாகின்ற இருளைப் போக்கி, அவர்கள் தன்னை அடைவதற்கு ஸாதநமாகின்ற ஜ்ஞாநத்தையும் அவர்களுக்குத் தந்தருளுகின்றான். இப்படி அஜ்ஞாநத்தைப் போக்குங்கால், அதனுள் சேர்ந்ததாகும் தநேச்சையையும் நாசம் செய்வான். அது ப்ராயேண தநநாசத்தால் தான் முடியும்.

இப்படிப்பட்ட மத்யமாதிகாரிகளைப்பற்றி ரக்ஷகன், 'ஸ்வாஂய வெஷு வியொமெந ஸஹாஹவதிதுஃவிதஃ' என்றும் சொன்னான். அவர்களுக்கு ப்ரிய பந்துக்களின் வியோகத்தையும் உண்டு பண்ணுவான். ஏனென்றால், செல்வத்தைப்போலத் தாரபுத்ராதிகளும் ஹ்ருதயக்ரந்தி யென்னப்பட்ட மனத்தின் பற்றுக்களுக்குக் காரணமாகின்றார்கள். பற்று அற்றதெனின் வீடு உற்றது என்றார் நம்மாழ்வார். பகவானிடம் ஹ்ருதயம் முழுதும் சென்று லயிக்குமட்டும் பரபக்தியெனப்பட்டது ஸ்திரப்படமாட்டாது. ஆனபடியால் பரண்யனுடைய அநுக்ரஹத்துக்கு விஷயமானவன் நிஶ்சலமான பகவத் பக்தியைப் பொருந்து மட்டும் மேலே குறித்த ப்ரகார மெல்லாம் பகவானால் போதிக்கப்படுவான். அவ்வதிகாரிக்குத் துக்காவஸரங்கள் நீண்டு வளரும். "தெநதுஃவெந ஸஂதவ்தஃ யதிஶாஂ நவஶிதவ்ஜெஸு। தவ்ஸாஂதஂ கூஶிஷ்ராமி யஸ்ஸுெ ரவிதுஃஷுஃஹஃ ॥" என்கிறபடியே, துக்க காரணங்கள் பலவாறாகப் பெருகின போதிலும், பகவானிடம் பக்தியை விட்டிலனாகில், இந்த்ராதிகளுக்கும் கிட்டாததோர் க்ருபையை ரக்ஷகன் அவனிடம் செய்கின்றான்.

ஸ்ரீ க்ருஷ்ணனுடைய ப்ரஸாத ப்ராப்திக்கு மேல்குறித்த துக்க பரம்பரைகள் நியமேந பூர்வவ்ருத்தங்கள் எனப்படாது. சிலர் விஷயத்தில் நிஶ்சல பக்திக்கு ஜந்மாந்தர ஸுக்ருதங்கள், பூர்வ ஜந்மத்தில் ஸம்பாதிதங்களான வித்யை, யோகம் முதலானவை போதுமான ஸாதநங்களாய் நிற்கக்கூடும். அவர்களுக்குத்

தநம், ஐச்வர்யம், தாரபுத்ராதி ஸுகம் இவற்றின் சேர்க்கை மோக்ஷப்ராப்திக்கு விரோதமாக மாட்டாது. 'காமாநாம் ஹ்ருதயே ஸம்ரோஹம் பவதஸ்து வ்ருணே வரம்' என்கிறபடியே, ப்ரஹ்லாதன் தனது ஹ்ருதயத்தில் காமங்கள் ஏறிடா வண்ணம் ஸ்ரீந்ருஸிஹ்மனை வரம் கேட்டான். அப்படிப்பட்ட உத்தமாதிகாரி விஷயத்தில் ஈச்வரன் தநநாசம் செய்கின்றானில்லை; பந்துவியோகங்களையும் உண்டாக்க மாட்டான். இன்னும், "ஐகாந்திநோ நிராகாங்க்ஷா நிஸ்ப்ருஹா ஸாதவோ ஹ்யதி வைபவைஸ்ஸமியா: । ததாபி தேஷு விதரதி தேவேஶ்வராணாம் ஸமஸ்ஸுகஸம்ருத்தி ஸம்பதாந்" என்கிறபடியே, பகவானிடம் ஏகாந்த பக்தியுள்ள ப்ரஹ்லாதனைப் போன்ற அதிகாரிகள் இவ்வுலகிலும் லோகாந்தரத்திலும் அபேக்ஷிக்கக்கூடிய ஸுகபோகங்களைப் பகவானிடம் விரும்பமாட்டார்கள். ஆயினும் தைத்யேச்வரர்களுடைய போகங்களை அநுபவிக்கும்படி ஸர்வேச்வரன் ப்ரஹ்லாதனுக்கு ஆஜ்ஞாபித்தான். த்ருவன் முதலானோர்களும் அப்படிப்பட்ட அதிகாரிகளே. ஆதலால் முமுக்ஷுக்களில் சில அதிகாரிகள் விஷயத்தில் மாத்ரம் தநக்ஷயம் முதலானவற்றைப் பகவான் ஸங்கல்பிக்கின்றான். செல்வச் செருக்கால் ஜ்ஞாநக் குருடனானவனுக்குத் தாரித்ரியம் ஜ்ஞாநக்கண்ணைத் திறப்பதோர் மையாகும். அதாவது அவனுக்கு ஜ்ஞாநத்தை அடைவதற்கேற்றதொரு ராஜமார்க்கத்தைத் தெளிவாகக் காட்டும். அவ்வழி நடப்பதற்கும் நடவாமல் நிற்பதற்கும் அவன் ஸ்வதந்த்ரன். தநப்ராப்தியை ஸர்வவிதத்தாலும் தேசிகன் நிராகரித்தார். இருந்த பொருளைத் துறந்தார் கூரநாதன். மஹா ப்ராஹ்மவித்துக்கள் பொருளுடைமையால் கெடமாட்டார்கள். ஆனாலும், ஸாதாரண ஜநங்கள் விஷயத்தில், பொருளுடைமை பரமபுருஷார்த்த விரோதியாக நிற்கின்றமையால், லோகஸங்க்ரஹத்தின் பொருட்டாவது பெரியோர் தநச்சேர்க்கையை விரும்பமாட்டார்கள்.

யாஜ்ஞவல்க்யர் துர்யாச்ரமியாகப் போவதற்குமுன் தமது ஆஸ்தியைத் தம்முடைய பத்நிமார்களுக்குள் விபாகம் செய்ய

யத்தனித்தார். அவர்க்குள் மைத்ரேயீ, "பகவந்! இந்த லோகத்தின் முழுவித்தமும் என் வஶமாயிற்றாகில், அதனால் எனக்கு அம்ருதத்வம் ஸித்திக்குமா?" என்றனள். அதற்கு யாஜ்ஞவல்க்யர் "ஸித்திக்கமாட்டாது. பணக்காரர்க்கு ஸுகஜீவநம் கிடைப்பதை யொத்து உனக்கும் ஸுகமான வாழ்வுண்டாம்; வித்தத்தால் மோக்ஷத்தை அடைய எதிர்பார்க்க வேண்டாம்" என்று சொன்னார். பிறகு மைத்ரேயீ மோக்ஷஸாதந மாகாத செல்வம் தனக்கு வேண்டா மென்று மோக்ஷோபயோகியான ஜ்ஞாநத்தை ப்ரார்த்தித்தாள். ஆதலால் பொருள் நேராக மோக்ஷவிரோதியாக மாட்டாது. அதனால் ஸாத்யமாகும் ஐஹிக ஸுகங்கள் மோக்ஷப்ரதிபந்திக ளென்பது தத்வம்.

* * * * * *

உயர் வாழ்வு.

ப்ரமதாநாத போஸ் என்பவர் பாஶ்சாத்ய வித்யா ஸாத்யமான நாகரிகம் ஶ்ரேஷ்டமென்று நம்மவர் ப்ரமிப்பதைக் கண்டிக்கின்றாரென்று முன்பே சொன்னோம். பங்காளி பத்ராதிபரான ஸுரேந்த்ரநாத பாநர்ஜியும் அவ்வண்ணமே எழுதுகின்றார். உயர்ந்த வாழ்வு (Higher life) என்பதைப் பாஶ்சாத்யர் பதார்த்த ஶாஸ்த்ரப் பயிற்சியினால் வ்ருத்தி பண்ணப்பட்ட ஐஹிக ஸுகங்களிலும், பொருள் சேர்க்கையிலும், ஸ்வதேசாபிமாநத்திலும், தேசாந்தராக்ரமணத்திலும், படைகள் பலத்திலும், ஸ்வாராஜ்ய பூர்த்தியிலும் காண்கின்றனர். இதன் முடிவான ப்ரயோஜநத்தைப் பெல்ஜியம் முதலான நாட்டுச் சீரழிவிலும், அந்நாட்டினர் துக்கங்களிலும், நிராயுத பாணிகளாக இறந்த ஜநங்களுடைய விதியிலும், அழிந்துபோன நகரங்களிலும், பதார்த்த ஶாஸ்த்ரங்கள் ப்ரஜாக்ஷயத்திற்கு உபகாரமாக நின்று பிறந்த ஶஸ்த்ரக் கூட்டங்களிலும் காணலாம். ஆதலால் நம்மவர் இதை யெல்லாம் சிந்தித்து, ஆத்ம வித்யையில் ப்ரதிஷ்டிதர்களாய் ஸர்வத்ர ஶாந்தியை வேண்டிய நம் பூர்வீகருடைய உயர்வாழ்வை யுகந்து வழிபடுதல் யுக்தமென்று பங்காளி பத்ராதிபர் வெளியிடுகின்றார். ப்ரக்ருதி ப்ரக்ருதியினி

டம்ப்ரியம் பாராட்டாது. அது அசேதநம். அஹம்ப்ரத்யயத்துக்கு விஷயமாகும் ஜீவனையும், அவனது முக்ய குணமான ஜ்ஞாநத்தையும் ப்ரக்ருதியைக் காட்டிலும் வேறல்ல வென்பவர், பரோபகாரத்தையும் பூததயையையும் கொண்டாடக் காரணம் கண்டிலர். இவை ஆத்ம தர்மங்கள். ஆத்மாவினுடைய ஸ்வரூப ப்ராப்திக்கு அநுகூலமான ப்ரவ்ருத்திகள் தான் ஒவ்வொரு விவேகியாலும் சிந்திக்கத்தக்கவை. ஐஹிக ஸுகங்களைத் தேடுதல் ஸ்வரூப ப்ராப்திக்கு விரோதமாகும். அதற்காகப் பரஹிம்ஸையை ஸாதகமாகக் கொள்பவர்கள் ஸ்வாத்ம த்ரோஹம் புரிபவர்களே. ஆத்மாவை ஒப்புக்கொள்ளாமலும், ஒப்புக்கொண்டு அதனுடைய ஶாஶ்வதமான ஶ்ரேயஸ்ஸைப்பற்றித் தர்க்கிக்காமலும், ஐஹிக ஸுகங்களே புருஷார்த்த மென்று நினைத்துக் கார்யவான்களாகப்பட்டவர்கள் ஶ்ரேஷ்டராக மதிக்கப்படும் காலம் இது.

இதற்கு நிதர்சநமாகச் சென்ற அக்டோபர் மாஸம் 'மாடர்ன் ரிவ்யூ' பத்ரிகையில் விநயகுமார் ஸர்க்கார் என்பவர் எழுதிய விஷயத்தைச் சுட்டிக் காட்டலாம். அவ்விஷயம் இந்தியா, சைனா, ஜபான் முதலான தேசத்தார்கள், சென்ற 2,200 வருஷம் முதற்கொண்டு, 1,200 வருஷம் வரையிலும் ராஜ்ய தந்த்ரத்திலும், வர்த்தகத்திலும், கல்வியிலும், லோகத்தில் முதன்மையை வஹித்தவர்கள் என்றும், ஒவ்வொரு தேசத்தாரும் மற்ற தேசத்தாருடன் ஸ்நேஹமும் பழக்கமும் பாராட்டினார்கள் என்றும் நிரூபிக்க எழுதப்பட்டது. இந்த யோசனையை நாம் நிராகரிக்கவில்லை. ஆனால் விநயகுமார ஸர்க்கார் ஸர்வ மதவிஷயத்திலும் உதாஸீநதையையும் அலக்ஷ்யதையையும் பாராட்டுவானேன்? அவருடைய நிந்தைக்கு உபநிஷத் மதமும் யோக ப்ரக்ரியைகளும் விலக்காகவில்லை. இதுகால ஸ்வரூபம்.

* * * * * *

**வேரற்ற ஸம்ப்ரதாயம்.**

அதே பத்ரிகையில் எஸ். ஸி. ராய் என்றொருவர், 'மதமும் தத்கால நாகரிகமும்' என்றொரு விஷயம் வெளிப்படுத்தினர். அவர் ப்ரஹ்ம ஸமாஜத்தினர். அந்த ஸமாஜத்தார்கள் தான் பூமியில் வரப்போகின்ற மதத்தைக் கண்டுபிடித்தனராம்.

அந்த மதம் ராம் மோஹன்ராய் என்பவர்க்குப் புலப்பட்டதாம்; தேவேந்த்ரநாத டாகூர், கேஶப் சந்தர் ஸன் முதலானோரால் அநுஸரிக்கப்பட்டதாம். அந்த மதத்தின் தத்வங்களாவன: (1) ஊஶ்வரஸூ் எனப்பட்ட ப்ரபஞ்சத்தின் பின்னால் ஸர்வஜ்ஞனாய், தர்மப்ரவ்ருத்தியுள்ளவனாய், ந்யாயத்தில் நிலைத்தவனாய், ஶாந்தனாய், லோகஹிதனாய், சேதநனாய், நம்முடைய பிதாவாய் ஒரு ஸர்வஶக்தி விஶிஷ்டன் இருக்கின்றான். அவன் இருப்பை ருஜூப்படுத்த ஸாத்யமில்லை. எல்லா மதங்களும் அவனை ஒப்புக்கொள்கின்றன. தத்வவிசார ஸமர்த்தர்கள் (Philosophers) செய்யும் யோசனைகள் அவன் இருப்புக்கு அநுகூலமாகின்றன. (2) ப்ரக்ருதிக்கு மேற்பட்டு ஒரு அப்ராக்ருத லோகமுண்டு. அது கால தேசங்கட்கு உட்பட்டதன்று; அநிந்த்ரிய கோசரம்; அதனின்று உண்மை, அழகு, நன்மை முதலான ப்ரத்யயங்கள் உதிக்கின்றன; தத்வத்ரஷ்டாக்களும் தீர்க்க தர்ஶிகளும், ஹ்ருதய ஶாந்தமுள்ளவர்களும் அவற்றை ஸாக்ஷாத்கரித்து, இந்த்ரிய ஜந்ய ஜ்ஞாநத்தாலறிந்த லோகங்களில் அநுபவிக்கின்றார்கள். (3) மநுஷ்யன் ஆத்மா; அவன் அப்ராக்ருத லோகத்துடனும், அதன் மத்தியில் இருக்கும் பரமாத்மாவுடனும் கலக்கலாம்; ப்ரார்த்தனையும் த்யாநமும் அதற்கு ஸாதநங்கள். ஒரு சேதநன் தானே பரமாத்மா வென்று நம்பினானாகில் அப்ராக்ருத லோக ப்ரதீதிகள் அவனுக்கு உண்டாகின்றன; அப்போது லோகத்தை அதிக்ரமித்த ஶக்தி விஶேஷங்கள் அவனுக்கு உண்டாகின்றன. அவனே அவதார புருஷன் எனக்கூடும்.

இந்த நிஶ்சயங்களுக்கு ப்ரமாணங்கள், ஸர் ஆலிவர்லாட்ஜ், யூகன், பெர்க்ஸன் முதலான விமர்சிகளுடைய அபிப்ராயங்கள். மேன்மேலும் வ்ருத்தியடைகின்ற நூதந மதங்களெல்லாம், பதார்த்த ஶாஸ்த்ர நிரூபணங்களை அவலம்பித்துப் பழைய விஶ்வாஸங்கட்குப் புதிய ரூபங்களை மேல்விவரித்தபடி கல்பிக்கின்றன. ஆதலால், ஶாஸ்த்ரம், அவதாரம், ஸாக்ஷாத்காரம், அதிமாநுஷ சேஷ்டிதம், அம்ருதத்வம் முதலான நம்பிக்கைகள் மேல்சொன்ன நூதந

கோட்பாட்டுக்காரர்களால் நவீநமான யோசனைகளுக்கு உட்படுத்தப்பட்டன.

ஆனாலும், மேலே தத்வங்களென விவரிக்கப்பட்டவைகள் முடிவானவைகளென்று நூதந மதக்காரர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. இந்த லோகத்தைப் பரமாத்மா எப்படி உண்டாக்கினான்? எவ்வண்ணம் காக்கின்றான்? இவ்வுலகத்தைப்பற்றி அவனுடைய முடிவான யோசனையென்ன? அவனுடைய தர்மம் வ்யாபிரிக்கும் க்ரமங்களென்ன? இறந்தபின் ஜீவனுடைய ஸ்திதியென்ன? இந்த ப்ரச்நங்கட்கு ப்ரத்யுத்தரம் இல்லையாம்; விமர்சிகள் (Philosophers) யோசனைகளுயர்ந்து, நம்முடைய அநுபவமும் மேற்சொன்ன விஷயங்களை க்ரஹிக்கும் வரையில், அந்த ப்ரச்நங்கள் அப்படியே நிற்கவேண்டுமாம்.

இவ்வண்ணம் யோசித்துவிட்டு, எஸ். ஸி. ராய் தமது ப்ரஹ்மஸமாஜம் தான் முடிவில் பிழைக்கப்போகின்றதென நிர்ணயித்துவிட்டார்.

நம்முடைய தேசத்துக்கு ஏற்பட்ட ஏற்றமாவது, நம் பூர்வாசார்யர்கள் வீண்யோசனைகளுக்கு இடந்தரவில்லை என்பதே. தத்கால தத்வவிமர்சிகள் ஸாங்க்யர்க்கு மேற்பட்டாரில்லை. ஸாங்க்யர்கள் ஈச்வராஸ்தித்வம் ப்ரமாண கோசரமன்றென நிச்சயித்தார்கள். புத்தர் ப்ரஹ்மாஸ்தித்வத்தை ஒப்புக்கொண்டாரில்லை. ஸர்வவைதிக ஸம்ப்ரதாயங்களுக்கும் ஸமாநாசார்யனான பாதராயணர் ‘சாஸ்த்ரயோநித்வாத்’ எனும் ஸூத்ரத்தால் வேத சாஸ்த்ரம் விநா ப்ரஹ்மம் அறியத்தகாததென்று முடித்தார். சங்கரராமாநுஜ பாஷ்யங்கள் இம்முடிவை ஆதரிக்கின்றன. “தம் த்வௌபநிஷதம் புருஷம் ப்ருச்சாமி’ என்று சொல்லி, உபநிஷத்தும், சாஸ்த்ரம் ஒன்றினாலேயே ப்ரஹ்மம் அறியத்தக்கதென்று முடித்தது. தர்க்கத்தால், [அதாவது - அநுமாநத்தால்] ப்ரஹ்மம் ஊஹிக்கத்தக்கதென்று வாதிக்கும் கௌதம காணாத தர்சநங்களைப் பாதராயணர் நிராகரித்து, மேலே ஸமாஜயோசனையில் விவரித்தபடி, ஒரு ஈச்வரன் அநுமாநத்தால் ஸாதிக்கத்தக்

கவனல்லன் என்று தீர்மானித்தார். நம் தேசத்தில் பிறந்த விமர்சிகளைக் காட்டிலும் பாஶ்சாத்ய விமர்சிகள் (Philosophers) அதீந்த்ரிய விஷயங்களை விசேஷித்து அறியவில்லை. இப்படிப்பட்ட விமர்சிகளை உத்தேசித்து, ஶ்ருதியும், "𑌯𑌸𑍍𑌯𑌾𑌮𑌤𑌂 𑌤𑌸𑍍𑌯 𑌮𑌤𑌂 𑌮𑌤𑌂 𑌯𑌸𑍍𑌯 𑌨 𑌵𑍇𑌦 𑌸𑌃 𑌅𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌤𑌂 𑌵𑌿𑌜𑌾𑌨𑌤𑌾𑌂 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌤𑌮𑌵𑌿𑌜𑌾𑌨𑌤𑌾𑌂" என்று சொல்லிற்று. இந்த வாக்யத்தைப்பற்றி ஸ்ரீ பாஷ்யகாரர், '𑌯𑌤𑍋 𑌵𑌾𑌚𑍋 𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇 𑌅𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌮𑌨𑌸𑌾 𑌸𑌹' என்று, அநந்தனை [அதாவது எண்ணிறந்த கல்யாண குணங்களுடன் கூடினவனை] ப்ரஹ்மத்தை வாக்காலும் மநஸ்ஸாலும் இப்படிப்பட்டவனென்று நிர்த்தேசிக்கக்கூடாமையை ஶ்ருதியே கூறுகின்றபடியால், ப்ரஹ்மம் இன்னதென்றும் இவ்வளவினதென்றும் அறிந்ததாக ப்ரமிப்பவர்க்கு அது அறியப்படாததே" என்று ஸாதிக்கின்றார். பர்யாலோசனையில், தர்க்கத்தால் ப்ரஹ்மத்தை அறிந்ததாக ப்ரமிப்பவர் விஷயம் இந்த ஶ்ருதி, இன்னும் ஶாஸ்த்ரத்தால் அறியத்தக்கதென்பதைப்பற்றியும், பாஷ்யகாரர் ப்ரஹ்மம் ஸம்பூர்ணமாக ஒருவகையாலும் அறியத்தகாததென்று திருவுள்ளம் பற்றி, ஶ்ருதி இடங்கொடுத்தவரையில் தான் அது அறியத்தக்கதென்று முடிக்கின்றார்.

ஶப்த ப்ராமண மொன்று தவிர ப்ரமாணாந்தரங்களால் அறியக்கூடாத ப்ரஹ்மத்தைப்பற்றி, ஸ்வயுக்தியால் சில ஏற்பாடுகளைச் செய்துகொண்டு புது மதங்களைக் கல்பிப்பது நிரர்த்தகம். ப்ரபஞ்சாதீதனாய் நம்மால் இச்சிக்கப்பட்ட குணவிஶிஷ்டனாய் ஒரு ஈஶ்வரனையாவது, இந்த்ரிய கோசரமல்லாத ஒரு பரலோகத்தையாவது, ஶப்த ப்ரமாணத்தை யொழித்தவர்கள் விஶ்வஸிக்க ந்யாயமில்லை. தங்களால் நம்பப்படாத மதங்கள் இவற்றை ஒப்புக்கொள்வதால், ஒப்புக்கொள்வோ மென்பவர்கள், தாங்கள் நிற்கும் கிளைகளை வெட்டிக்கொண்டே அவற்றை ஆஶ்ரயமாக நம்புகின்றவர்களை ஒத்தவர்கள். ப்ரமாணமற்ற வஸ்துக்களுடன் மநுஷ்யன் கலப்பதென்பதும், அதற்காக ஸாதநங்கள் கல்பிப்பதும் முயலின் கொம்புக்கு நீளம் நிச்சயிப்ப தொத்ததே.

லோக ஸ்ருஷ்டிக்ரமமும், ப்ரபஞ்ச ரக்ஷண வ்யாபாரமும், ஸ்ருஷ்டி ஸ்திதி ப்ரளயங்களுக்குக் காரணமும், ப்ரயோஜநமும், கர்மரூபமான ஈச்வர சக்தியின் ஸ்வரூபமும், ப்ரக்ருதியும், புருஷனும் அநாதி யெனும் சாஸ்த்ரப்படி ஜீவனுடைய சாச்வதமான இருப்பும், அவன் விலக்ஷணங்களான பல சரீரங்களைப் பொருந்தும் வண்ணமும், ஈச்வர ஸ்வரூபத்தையும், அவனை யடைவதற்குத் தகுந்த உபாயங்களையும் நம்முடைய வேதாந்த சாஸ்த்ரமே தெளிவாக வெளியிடுகின்றது. இவற்றிற்கு ருஜுவில்லையென்றால் ஈச்வராஸ்தித்வத்துக்கும் ருஜுவில்லை. ஈச்வராஸ்தித்வத்தைக் கிறிஸ்தவ மஹம்மதிய மதங்கள் ஒப்புக்கொள்கின்றன. மற்றைய விஷயங்களை விவேகிகள் ஸம்மதிக்கும்படியாக அந்த மதங்கள் வெளிப்படுத்தவில்லை. ஆதலால் அம்மதங்கள் அநுமதி செய்யும்வரையில் தான் ப்ரஹ்ம ஸமாஜத்தார் வேதாந்த மதத்தை ஒப்புக்கொள்கின்றார்கள் என்றால், நாஸ்திகதை அதைக்காட்டிலும் அவர்க்கு நன்மை செய்யும் என்று நமக்குத் தோன்றுகின்றது.

இதனுடன் நிற்காமல், தியாஸபியாகின்ற புது மரம் விலக்ஷணமாகப் புஷ்பிக்க ஆரம்பித்துவிட்டது. மநுஷ்யர் அறியாத மஹாத்மக்களுடைய கூட்டமொன்று உண்டாம். அதுவோ மற்றெந்தக் கூட்டமோ சுத்த தர்ம மண்டலமாம். ‘ப்ரணவவாதம்’ என்றொரு க்ரந்தம் அதையொட்டி முன் பிறந்தது. ‘யோக தீபிகை’ யென்றொன்று தலைகாட்ட ஆரம்பித்துவிட்டது. 26-அத்யாயமுள்ள பகவத்கீதையொன்றும் கண்டரஹஸ்யமென்று அதன் வ்யாக்யாநமொன்றும் முளையில் நிற்கின்றன. இவற்றின் விசாரம் ஹிந்து பத்ரிகையில் வெளிப்பட்டது.

சங்கர ராமாநுஜ மத்வ பாஷ்யங்களில் ஸர்வேச்வரனே ஸ்ரீ க்ருஷ்ணனாய் அவதரித்தானென்று சொல்லியிருக்கிறது. கீதையில் தான் ஸர்வலோக மஹேச்வரன் என்றும், ஸர்வாந்தர்யாமி யென்றும், ஸர்வரக்ஷகனென்றும், மோக்ஷப்ரதனென்றும் ஸ்ரீ க்ருஷ்ணன் பலமுறை வெளியிட்டும், ஹம்ஸயோகியெனப் பெயர் கொண்ட ஒருவர் கீதையெங்கும் ஸ்ரீ க்ருஷ்ணன் ஸோஹம் என்றும்,

ஶம் என்றும் சொல்லுமிடங்களில், அவர் தன்னைக் குறித்தாரில்லை யென்றும், தன்னைக்காட்டிலும் வேறுபட்டதோர் பரமாத்மாவை நிர்த்தேசித்தாரென்றும் அபிப்ராயப்படுகின்றார் எனச் சொல்லப் படுகின்றது. "அஜோऽபி ஸந் அவ்யயாத்மா பூதாநாமீஶ்வரோऽபி ஸந்", என்று, பகவான் தன்னுடைய அவதார ரஹஸ்யத்தை வெளியிட்டது, இந்த நூதந வ்யாக்யாதாவுக்கு வேண்டாம். தன்னைக்காட்டிலும் மேற்பட்ட தொன்றில்லை யென்று வெளிப்படுத்தி, "மத்த: பரதரம் நாந்யத் கிஞ்சிதஸ்தி தநஞ்ஜய।" என்று மொழிந்ததும் வேண்டாம். விபுவான ஈஶ்வரன் ஸ்வாம்ஶத்தால் அவதரித்தாலும், தன் விஸ்தாரத்தின் ஒவ்வொரு ப்ரதேசத்திலும் ஸர்வஜ்ஞனாய், ஸர்வ ஶக்தியாய், ஸமஸ்த கல்யாணகுண பரிபூர்ணனாய் அவன் இருப்பதை மறந்ததோர் வ்யாக்யாநமும் உண்டோ? ஶுத்த தர்மமண்டலத்தார்க்கு வர்ணாஶ்ரமங்களும் வைதிக தர்மங்களும் வேண்டியதில்லை. இதுவரையில் ஒருவராலும் எக்காலத்திலும் கேட்கப்படாத ப்ரமாணங்கள் தியாஸபியில் சேர்ந்தவர்களுக்கு அகப்படுகின்றன. ஸநாதநமான வைதிக ஸம்ப்ரதாயங்கட்குத் தேசாந்தரஸ்தர் ஸம்பந்தங்களால் விளைந்த கேடுகளைச் சிந்தித்து ஶோகிக்க, யுகஸஹஸ்ரங்கள்கூடப் போதுமான காலமாகத் தோன்றவில்லை. இவ்வண்ணம் பலர் பலவாருகப் பகவானுடைய கலிகோலாஹல க்ரீடைகளை விஸ்தரிக்கின்றார்கள். கலியின் ஸாதுத்வம் மனம்போனபடி யெல்லாம் மதங்கள் கல்பிப்பதைப்பற்றிச் சொன்னதன்று. "த்யாயந் க்ருதே யஜந் யஜ்ஞைஸ் த்ரேதாயாம் த்வாபரேऽர்சயந்। யதாப்நோதி ததாப்நோதி கலௌ ஸங்கீர்த்ய கேஶவம்॥" என்கிறபடியே, பகவானுடைய நாமஸங்கீர்த்தநமே கலியுகத்தில் ஶ்ரேயஸ்கரமென்பதாலும், இவ்விதமான உபாயத்தை ஸர்வஜாதி நிஷ்டர்களும் அவலம்பிக்கலாமாதலாலும், கலியின் ஸாதுத்வத்தை மஹர்ஷி வெளிப்படுத்தினார். அவ்வவருடைய வர்ணாஶ்ரம தர்மங்களை ப்ரயத்ந பூர்வமாக நாசம்செய்வதை யோசித்துக் கலியின் ஸாதுத்வம் சொல்லப்பட்டதன்று.

ஸ்ரீ:.

ஸ்ரீமதே ஹயக்ரீவாய நம:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# ஸ்ரீ பாஞ்சராத்ரம்.

## (இரண்டாவது பாகம்)

இந்தப் பஞ்சராத்ரஶாஸ்த்ரம் நமக்கு உபதேஶிப்பது என்னவென்பதைச் சற்று ஆலோசித்துப் பார்ப்போம். முதலில், வேதங்களின் தத்வார்த்தத்தை யதாவத்தாகத் தெரிந்து கொள்ளாமல் தடுமாறும் ஜீவகோடிகளை உஜ்ஜீவிப்பிக்கவேண்டு மென்னும் கருணையால், ஸ்ரீபகவான், எல்லாராலும் எளிதில் அறியக்கூடியதான இந்த ஶாஸ்த்ரத்தை ஸ்வயமே அவதரிப்பித்தார் என்பதை நாம் மறக்கக்கூடாது. இந்த ஶாஸ்த்ரம் முக்கியமாகப் போதிப்பிப்பவையாவன :—

(1) ஸ்ரீமந்நாராயண னென்று சொல்லப்படும் ஸ்ரீ வாஸுதேவனாகிற பரமாத்மாவே அகில ஜகத்திற்கும் காரணம்;

(2) அவனுடைய குணங்கள், அவனுடைய விபூதிகள்போலக் கணக்கற்றவையா யிருக்கையிலும், ஜ்ஞாநம் ஐஶ்வர்யம் ஶக்தி வீர்யம் பலம் தேஜஸ் ஆகிய இந்த ஆறு குணங்களும் ரத்நத்தைக் காந்திகள் போல அவனை எப்பொழுதும் அலங்கரித்துக்கொண்டே நிற்கின்றன;

(3) இப்படி ஷாட்குண்ய பரிபூர்ணனான இந்தப் பகவான், ஆஶ்ரிதர்களின் மீது தனக்கு உள்ள அநுகம்பையினால், அவர்கள் தன்னை ஸுலபமாக ஆஶ்ரயித்து உஜ்ஜீவிக்கும் பொருட்டு ஸ்வேச்சையாகவே தன்னை வாஸுதேவ ஸங்கர்ஷண ப்ரத்யும்ந அநிருத்த ரூபியாக வ்யூஹித்து நிற்கின்றான்;

(4) அப்படி வ்யூஹித்து நிற்கும் பரமாத்மாவை உபாஸிப்ப தன் ப்ரகாரமும், ஒவ்வொருவரும் தன்தன் வர்ணாச்ரம தர்மங்களைக் குறைவின்றிப் பரிபாலநம் செய்துகொண்டே, அபிகமந உபாதாந இஜ்யா ஸ்வாத்யாய யோகங்களென்று வ்யவஹரிக்கப் படும் அநுஷ்டாநங்களை அந்தந்தக் காலங்களில் அந்தப் பரமாத்மாவின் ஆராதநரூபமாக அநுஷ்டித்து வருவதேயாம்;

(5) அப்படிப் பாரமைகாந்த்யத்துடனும் பஞ்சகால பராயணதையுடனும் இந்த அநுஷ்டாநங்களை யதாக்ரமம் நடத்திவந்தால் அப்படி அநுஷ்டிக்கிறவன் அந்த அநுஷ்டாநத்தின் பலமாக பரம புருஷார்த்தமான பரம பதத்தை அடைகிறான்;

(6) தவிரவும், அவாங்மநஸ கோசரமான தனது ஸௌசீல்யத்தை அங்யாத்ருசமாக வெளியிட்டுக்கொண்டு, அந்தப் பரமாத்மா, பூமியில் உண்டான கோயில்களிலும் மாளிகைகளிலும் ஆச்ரமங்களிலும் அஜ்ஞாபிஜ்ஞ விபாகமற எல்லாராலும் ஆராதநீயனாய், மத்யே ஸம்பாவ்யங்களான அபராதங்களெல்லாவற்றையும் பொறுத்து, ஆஸந போஜந சயநாதிகளெல்லாம் ஆராதகர்களிட்ட வழக்காய், அதனால் மஹத்தான த்ருப்தியை அடைந்து கொண்டு, 'அர்ச்சை' என்று வ்யவஹரிக்கப்படும் விக்ரஙகளிலும் ஒரு அவதாரத்தைச் செய்கிறானென்றும் இந்த சாஸ்த்ரம் சொல்லுகின்றது; அந்த அர்ச்சையில் ஸ்ரீ பகவானை ஆராதிப்பதன் ப்ரகாரங்களைப் பற்றியும் இது பரக்கப் பேசுகின்றது. இப்படி ஆராதிப்பதன் பலமும் பரமபுருஷார்த்தமாம்.

இந்த உபதேசங்களெல்லாம் ச்ருதிஸ்ம்ருதிகளுக்கு விருத்தங்களென்று சொல்வது சாத்யமில்லை; மந்த மதிகளாயும் ஸர்வ ப்ரகாரத்திலும் அசக்தர்களாயுமுள்ள நமக்கு, ச்ருதிகளிலும் ஸ்ம்ருதிகளிலும் சொல்லப்பட்டுள்ள தத்வார்த்தத்தை எளிதில் போதிப்பிப்பதுடன், பரம புருஷார்த்தத்தையும் இவை ஸாதித்துக் கொடுக்கின்றனவென்றே நாம் அறிகிறோம். ஸர்வ ப்ரஜைகளிடத்திலும் அளவற்ற அநுகம்பையை உடைத்தாயிருக்கும் ஸ்ரீ பகவானுக்கு, 'ஈநம் வு தீவஶிவ காருண்ணிகொ ஜநாகி' என்கிறபடி இந்தமாதிரியான ஒரு சாஸ்த்ரத்தை அவதரிப்பிப்பது அநுபபந்நமன்று. ஸ்ரீ வேத சாஸ்த்ரத்தை அவதரிப்பித்ததற்கு இந்த அநுகம்பை காரணமானாற்போல, இந்தப் பஞ்சராத்ர சாஸ்த்

ரத்தை அவதரிப்பிப்பதற்கும் அதுவே காரணமாகக் கூடும். இந்த ஶாஸ்த்ரத்தில் விஶ்வாஸம் செய்யாதவர்களின் தூஷணங்களைப் பரிஶீலநம் செய்யும் முன்னதாக, இதன் கொள்கைகளை நாம் விஶதமாகத் தெரிந்துகொள்வது அவஶ்யமாதலால் அதைச் சற்றுக் கவனிப்போம்.

(1) ஸ்ரீ பாஞ்சராத்ரத்தின் முதல் கொள்கையைப்பற்றி அதிகமாக விவாதம் ஏற்படுமென்ருவது, அது ஶ்ருதி ஸ்ம்ருதிகளில் சொல்லப்படவில்லையென்ருவது சொல்வது உபபந்நமாகாது.

" விஷ்ணௌ ஜந்ம க்ருதம் ஸர்வமிதி வித்தி பரந்தப ॥
ஸ்ருஜத்யேஷ மஹாவிஷ்ணு: ஸம்ஹர்த்தா ச பராபரம் ॥ "

என்றும்,

" நாராயணாத் பரோ தேவோ ந பூதோ ந பவிஷ்யதி ।
ஏதத் ரஹஸ்யம் வேதாநாம் புராணாநாம் ச ஸத்தம: ॥ "

என்றும், ஸ்ரீமந் நாராயணனுக்கே ஜகத் காரணத்வமும் பரதேவதாத்வமும் இதிஹாஸ புராணங்களினுல் வேதரஹஸ்யங்களென்று பலவாருக ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன.

" ஸர்வேஷ்வதீதம் வேதேஷு ஸர்வைரங்கீக்ருதம் ச யத்
நாராயணாக்யயா ஸூக்தம் பவதா நவத்யம் ।
ஸம்ஜ்ஞாதம் த்வாம் பௌருஷம் ஜகத்வித்ரம்
ப்ராஹுஸ்த்வாம் புருஷமீஶ ஸ்வேஷ்வராஜஹரா ॥ "

[ ஸர்வ வேதங்களிலும் படிதமாயும் * எல்லாராலும் அங்கீக்ருதமாயுமுள்ள நாராயண ஸூக்தமென்னும் புருஷ ஸூக்தமானது, ஹே பகவந்! உன்னையே பரமபுருஷனென்று ப்ரதிபாதிக்கின்ற

---

* புருஷ ஸூக்தமானது எல்லா வேதங்களிலும் படிதமாக இருக்கின்றது என்பது பின்வரும் ஶ்லோகத்தினுல் விளங்கும்:—

" ருக்வேதே ஷோடஶர்சம் ஸ்யாத் யஜுஷ்ஷ்வஷ்டாதஶர்சகம் ।
ஸாமவேதேஷு ஸப்தர்சம் ததா வாஜஸநேயகே ॥ "

தன்றே?] என்று ஸ்ரீ ஆழ்வான் அநுக்ரஹித்திருக்கிறபடி வேதங்களெல்லாம் ஸ்ரீமந்நாராயணனையே ப்ரதிபாதிக்கின்றன வென்பது நாம் எல்லாரும் ஒப்புக்கொண்ட விஷயம்.

(2) இரண்டாவது கொள்கையான அவனுடைய ஷாட்குண்ய பூர்த்தியைப்பற்றி நமக்கு ஒரு ஶங்கை ஜநிக்கக்கூடும். பகவானிடத்தில் அளவற்ற கல்யாண குணங்க ளிருக்கையில், இந்த ஆறு குணங்களை மட்டில் தனித்தெடுப்பதற்குக் காரணமென்? என்று கேட்கலாம். இந்தக் குணங்கள்தாம் பகவானுடைய பரத்வத்தை விஶேஷித்து ப்ரதி பாதிக்கின்றன வென்பதே அதற்கு ஸமாதாநமாகத் தோன்றுகிறது. தயை க்ஷமை முதலிய மற்றைத் திருக் கல்யாண குணங்களெல்லாம் இந்த ஆறு குணங்களின் ஶாகா பேதங்கள்; இவைகளினின்று அவை உத்பந்நமாகின்றன வென்றே ஆசார்யர்களுடைய நிர்வாஹம்.

"ப்ரக்ருஷ்டம் விஜ்ஞாநம் பலமதுலம் ஐஶ்வர்யமகிலம்
விமர்யாதம் வீர்யம் வரத! பரமா ஶக்திரபி ச।
பரம் தேஜஶ்சேதி ப்ரவரகுணஷட்கம் ப்ரதமஜம்
குணாநாம் நிஸ்ஸீம்நாம் கணநவிகுணாநாம் ப்ரஸவபூ:।"

[ஜ்ஞாநம், பலம், ஐஶ்வர்யம், ஶக்தி, தேஜஸ் ஆகிய இந்த ஆறு குணங்களும், எல்லையற்றிருக்கும் மற்றைக் குணங்களுக்கு உத்பத்தி ஸ்தாநம்] என்று ஸ்ரீ ஆழ்வானும்,

"நிர்தோஷ ஸாம்ய குணகண ஹேதவ: ஷட்குணா:"

[ப்ரஸித்தங்களான இந்த ஆறு குணங்களும், எவ்வித தோஷ ஸம்பந்தமு மின்றிக்கு ஸதா கல்யாணங்களாக இருக்கும் தயாதி குணங்களை ஜநிப்பிக்கின்றன] என்று ஸ்ரீ பட்டரும் அநுக்ரஹித்திருக்கிறார்கள்.

இந்த ஆறு குணங்களையும் ஸ்ரீ பட்டரே பின் வருமாறு விவரித்திருக்கிறார்.

"யாமாஹுர் விஶ்வசோக்ஷ: ஸ்வத்வம் ஸ்வஸ்திதா வாக்ஷகாயே-
நியந்த்ருத்வம் நியந்த்ருத்வம் வா ப்ராவ்ரு ஸமாயிராஜ!।
காரகத்வ ஶேஷம் ஸர்வவித் ஸ்வப்ராகாஶம்
தத்வர்ண தீப்திம் ஜ்ஞாநத்ராவித் ஷாட்குண்யே॥"

[ஒன்று பாக்யம் மற்றொன்று அபாக்யமென்றும், சில ஹேதுக்களைக் கொண்டே கார்யத்தை ஸாதித்துக்கொள்ள வேண்டுமென்றும், சில ஸமயங்களில்தான் கார்யம் ஸாதிதமாகிற தென்றும், ஸித்தியிலும் ஒரு அளவு உண்டென்றும் இத்யாதியான ஒரு வரம்பு நமக்குண்டு; அப்படியில்லாமல் எல்லா வரம்பையும் தாண்டி ஸகல கார்யங்களிலும் தனது ஸங்கல்பத்தை மட்டில் அநுஸரித்து அவனது ஶக்தி ப்ரஸரிக்கின்றதன்றோ? அப்படி அந்த ஶக்தி ப்ரஸரிக்கும் ஸகல கார்யத்திலும் பகவானே சிதசிதாத்மகமாயுள்ள தனது ஶரீரத்வாரா சிலந்திப்பூச்சிபோல ஜகத்திற்கு உபாதாந காரணமாகிறான் என்று ஶ்ருதி சொல்லுகின்றது. * அப்படி ஜகத் ஸ்ருஷ்ட்யாதிகளில் நிரர்க்களமாக ப்ரஸரிக்கும் ஶக்திக்கே ஶக்தி என்று பெயர்.]

"ஸ்வ உஹ்ஷிஶ்லிதிஶீஶ! ஹ்ருஶக்ருயொ-
வ்ருக்ஷ வீதக்ரு உஷவ ஷிஹஷிபூயசு ।
வவா்ஶிவ ஸ்வஉஶேஷிஉஷ ஸுரும
தவ வராஸ்ருதகாரணவாரணம் ॥"

[கணக்கற்ற வ்யாபாரங்களில் ப்ரவ்ருத்தித்தாலும், எவ்வித ஶ்ரமமு மின்றிக்கே தனது திருமேனியைப் போல ஸர்வ ஜகத்தையும் பகவான் பரிக்கிறான் என்பதே அவனுடைய அஸாதாரண பலத்தைக் காட்டுகின்றது.]

"ஶ்ரீமநாஹிமம்ய ஐவ யத்வகுஶாயபூா
நிஜஸந்நியொரவிக்ருதெசா விக்ருதெணாஷி ।
ப்ரியாரம! வீயபூதி தத்தவ ஷஉஜெ
ஸவிகார காரணமிதெசா விநிவாயபூம் ॥"

[கஸ்தூரிகா கந்தமானது, தான் எவ்வித விகாரத்தையு மடையாமல், தனது ஸந்நிதி மாத்ரத்தால் ஸந்நிஹிதருடைய மநஸ்ஸை விகாரமடையும்படி செய்வதுபோல, பகவானும், தான் எவ்வித விகாரமும் அடையாமல் ஸகல பதார்த்தங்களையும் விகரிப்பிக்கிறான். இதைத்தான் அவனுடைய வீர்யம் என்று சொல்லுகிறார்கள்.]

---

* "யயொணநாபிஃ ஸ்ருஜதெ க்ருஹ்ணதெ ச" என்பது ஶ்ருதி வாக்யம்.

"𑌸𑌹𑌕𑌾𑌰𑍍𑌯𑌨𑌪𑍇𑌕𑍍𑌷𑌮𑌵𑌿𑌹𑌤𑌂 𑌹𑌿 𑌯𑌦𑌨𑌪𑍇𑌕𑍍𑌷
𑌕𑌰𑍍𑌤𑍃𑌤𑌾 । 𑌭𑌗𑌵𑌨𑍍 ! 𑌜𑌯𑌤𑌿 𑌤𑍇𑌜 𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌣𑌤𑌾𑌰𑍍𑌤𑌿𑌜𑌿𑌤𑍍𑌤𑍃𑌤𑌿
𑌸𑌦𑌾𑌹𑌿𑌹𑌾𑌵𑌕𑌂 ॥"

[லோகத்தில் ஸர்வவித கர்த்ருத்வமும் ஸ்வதந்த்ரங்களான சில ஸஹகாரிகளை அபேக்ஷித்தே நிற்கின்றது. பகவானுடைய கர்த்ருத்வமோ அப்படியன்று. ஸர்வமும் பகவச் சரீரமாகையால் ஸ்வதந்த்ரங்களான ஸஹகார்யந்தரங்களை அபேக்ஷியாத தன்றே அவனுடைய கர்த்ருத்வம்? அது ஆச்ரிதர்களுடைய தாபத்ரயத்தையும் அவர்களின் விரோதிகளையும் ஸதா கீழ் அழுத்திக்கொண்டே நிற்கின்றது. இதைத்தான் அவனது தேஜஸ் என்று சொல்லுகிறார்கள்.]

(3) இந்த சாஸ்த்ரத்தின் மூன்றாவது கொள்கை இதற்கு அஸாதாரணமானது. ஸாதுக்களை ஸம்ரக்ஷிப்பதற்காக வாஸுதேவன், ஸங்கர்ஷணன், ப்ரத்யும்நன், அநிருத்தன் என்று தன்னை நாலுவிதமாக வ்யூஹித்துக்கொண்டு ஸ்ரீ பகவான், வ்யூஹாவதாரங்கள் என்று வ்யவஹரிக்கப்படும் இந்த அவதார விசேஷங்களைச் செய்கிறான் என்னும் இந்தக் கொள்கையும் ச்ருதிக்கு ஒத்ததே.

"𑌅𑌜𑌾𑌯𑌮𑌾𑌨𑍋 𑌬𑌹𑍁𑌧𑌾 𑌵𑌿𑌜𑌾𑌯𑌤𑍇"

[பகவான், தான் பிறப்பற்றவனாக இருக்கையிலும், பஹு ப்ரகாரமாக அவதரிக்கிறான்] என்று ச்ருதி சொல்லுகிறதன்றோ?

"𑌇𑌯𑌂 𑌦𑍇𑌵𑍇𑌦𑍃𑌶𑍀 𑌦𑍇𑌵𑍇 𑌸𑍍𑌥𑌿𑌤𑍍𑌯𑌾 𑌕𑌿𑌲𑍈𑌷𑌾 𑌵𑌿𑌹𑍃𑌤𑌯𑍇"

[பகவான் இப்படி வ்யூஹித்து அவதரிக்கிறான், என்றும் வ்யவஸ்தையானது அவனுடைய ஐச்சிகமான விஹாரமே] என்று ஸ்ரீ ஆழ்வானும் இந்த வ்யூஹாவதாரத்தைப் பற்றிப் பேசியிருக்கிறார்.

இந்த நாலு வ்யூஹங்களுள், ஒவ்வொன்றிலும் பகவான் கணக்கற்ற ஸகல கல்யாண குணங்களுடன் கூடியே இருக்கிறான் என்பது தத்வ ஸ்திதியானாலும், ஆச்ரிதர்களுடைய ஸௌகர்யத்தை உத்தேசித்து, கீழ்சொல்லப்பட்டுள்ள ஆறுகுணங்களையும்

பின் வருமாறு ஒரு விதமாக விபாகித்துக்கொண்டு அவதரிக்கிருன் என்பதும் இந்த ஶாஸ்த்ரத்திற் சொல்லப்படுகிறது போலத் தெரியவருகிறது. வாஸுதேவ ரூபியானவன், பரத்வத்தோடு ஒத்து ஷாட்குண்ய பரிபூர்ணனுய் நித்யராலும் முக்தராலும் அநுபவிக்கத் தகுந்தவனுய் நிற்கிருனென்றும், ஸங்கர்ஷண ரூபியானவன் ஜ்ஞாநம் பலம் இந்த இரண்டு குணங்களுடன் கூடினவனுய் ஶாஸ்த்ர ப்ரதாநம் ஸம்ஹாரம் இவைகளைச் செய்கிருனென்றும், ப்ரத்யும்ந ரூபியானவன் ஐஶ்வர்யம் வீர்யம் இவைகளை மேற்கொண்டவனுய் ஸ்ருஷ்டியையும் தர்ம ப்ரவர்த்தநத்தையும் செய்கிருனென்றும், அநிருத்த ரூபியானவன் ஶக்தி தேஜஸ் இந்தக் குணங்களை யுடையவனுய் ரக்ஷணத்தையும் மோக்ஷஹேதுவான ஸத்வ ப்ரவர்த்தநத்தையும் செய்கிருனென்றும் இந்த ஶாஸ்த்ரம் சொல்லுகின்றது. இந்த வ்யவஸ்தையை ஸ்ரீ பட்டர் ஸ்ரீரங்க ராஜ ஸ்தவத்தில் பின்வருமாறு ஸங்க்ரஹித்திருக்கிருர் :—

"ஷாட்குண்யாத் வாஸுதேவ: பர இதி ஸ பவாந் முக்தபோ
க்யோ பலிஷ்டாத் போதாத் ஸங்கர்ஷணஸ் த்வம் ஹரஸி விதநு
ஷே ஶாஸ்த்ரம் ஐஶ்வர்யவீர்யாத் । ப்ரத்யும்ந: ஸர்கதர்மௌ
நயஸி ச பகவந் ஶக்திதேஜோऽநிருத்தோ பிப்ராண: பாஸி
தத்த்வம் கமயஸி ச ததா வ்யூஹ்ய ரங்காதிராஜ !;"

இந்த விபாகத்திஞல் வ்யூஹாவதாரங்களில் பிரித்துச் சொல்லப்பட்ட குணங்கள் தவிர்த்து மற்றைக் குணங்களில்லை யென்று நினைப்பது ஸரியன்று. சிற்சில குணங்களை விஶேஷித்து வெளியிட்ட போதிலும், ஒவ்வொரு அவதாரத்திலும் அவன் ஸமஸ்த கல்யாணகுண பரிபூர்ணனே.

"குணை: ஷட்பிஸ் த்வேதை: ப்ரதமதரமூர்த்திஸ் தவ ப
பௌ ததஸ் திஸ்ரஸ் தேஷாம் த்ரியுக! யுகலைர் ஹி த்ரிபிர
பூத் । வ்யவஸ்தா யா சைஷா நநு வரத! ஸாவிஷ்க்ருதி
வஶாத் பவாந் ஸர்வத்ரைவ த்வகணித மஹாமங்கள குண: ॥"

[ஹே ஷாட்குண்ய பரிபூர்ணஞன பகவானே! 'உன்னுடைய முதல் மூர்த்தியாகிற பரவாஸுதேவ மூர்த்தியானது ஆறு குணங்

களாலும் விளங்குகின்றது. மற்றை மூன்று மூர்த்திகளும் ஒவ்வொன்றுக்கு இரண்டு குணங்கள் வீதம் பிரித்துக்கொண்டு நிற்கின்றன’ என்னும் இந்த வ்யவஸ்தை உபாஸகர்களின் ஸௌகர்யத்திற்காகவே தவிர வேறு குணாந்தரங்களின் இல்லாமையைக் குறிப்பதற்கன்று. நீ எல்லா அவதாரங்களிலும் ஸமஸ்த கல்யாண குண விஶிஷ்டனன்றோ?] என்று ஸ்ரீ ஆழ்வான் அநுக்ரஹித்திருக்கிறார்.

இப்படிப்பட்ட பரமாத்மாவை உபாஸிப்பதன் ப்ரகாரமும் ஸ்ம்ருதிகளிற் சொல்லப்பட்டிருக்கும் வர்ணாஶ்ரம தர்மங்களைக் குறைவறப் பரிபாலநம் செய்துகொண்டே பஞ்ச கால பராயணர்களாய்ப் பகவதாராதநம் செய்வதேயாம். பஞ்சகால விபாகத்தைக் கீழ் குறிக்கப்படும் பஞ்சராத்ர ஶ்லோகங்களிலேயே காணலாம்.

(1) அபிகமநம்:

“𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑍇 𑌮𑍁𑌹𑍂𑌰𑍍𑌤𑍇 𑌚𑍋𑌤𑍍𑌥𑌾𑌯 𑌪𑍍𑌰𑌾𑌗𑌂𑌶𑌂 𑌵𑌿𑌭𑌾𑌵𑌸𑍋𑌃 ।
𑌜𑌗𑌦𑍍𑌯𑍋𑌨𑌾 𑌪𑌰𑌂 𑌸𑍍𑌤𑍋𑌤𑍍𑌰𑍈𑌃 𑌶𑍁𑌦𑍍𑌧𑌵𑌾𑌕𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌕𑌂 𑌯𑌥𑍋𑌦𑌿𑌤𑍈𑌃 ।
𑌸𑍍𑌤𑍁𑌵𑍀𑌤 𑌜𑌗𑌦𑍍𑌯𑍋𑌨𑌿𑌂 𑌤𑌦𑍍𑌵𑌾𑌗𑍀𑌶𑌨𑌂 𑌸𑍍𑌤𑍁𑌤𑌂 ॥

[ப்ராஹ்ம முஹூர்த்த மென்று சொல்லப்படும் விடியற் காலத்தில் எழுந்து ஶுத்தமான சித்தம் வாக் கர்மம் இவைகளுடன் கூடினவனாய் ஜகத் காரணனான பகவானைப்பற்றி ஒவ்வொரு உபாஸகனும் த்யாநம் ஸ்தோத்ரம் முதலியவைகளால் புகழவேண்டும். இப்படிச் செய்வதற்கு அபிகமநம் என்று பெயர்.] இந்தக் காலத்தில் தேஹாதிகளின் ஶுத்தியை ஸம்பாதித்துக் கொள்ளும் பொருட்டு ஸ்நாநம் முதலியவற்றைச் செய்வதும் ஶ்ருதி சோதிதங்களான ஸந்த்யோபாஸநாதிகளைச் செய்வதும் ப்ராப்தம்.

(2) உபாதாநம்:

“𑌤𑌤𑌃 𑌪𑍍𑌰𑍋𑌷𑍍𑌠𑌾𑌹𑍍𑌨𑌿 𑌨𑌾 𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌾𑌣𑌾𑌮𑍁𑌪𑌾𑌦𑌾𑌨𑌮𑍇𑌵 𑌚 ।
𑌸𑌮𑌵𑌸𑍍𑌥𑌾𑌮𑌨𑌿𑌷𑍍𑌠𑍍𑌯𑍈 𑌕𑌾𑌰𑌣𑌂 𑌪𑍂𑌜𑌨𑌂 𑌪𑌰𑌂 ।
𑌤𑌦𑍁𑌪𑌾𑌦𑌾𑌨𑌸𑌂𑌜𑍍𑌞𑌂 𑌚𑍈𑌵 𑌕𑌰𑍍𑌮𑌕𑌾𑌲 𑌵𑍇𑌦𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌂 ।”

[ப்ராத: கால கர்மங்கள் முடிந்தவுடன் ஸ்ரீ பகவானுடைய திவ்யாராதநமாகிற யாக நிஷ்பத்தியின் பொருட்டுப் புஷ்பம் பலம் முதலியவற்றை ஸம்பாதிக்க வேண்டும். இதற்கு உபாதாந மென்று பெயர்.] நாம் தர்மத்திற்கு ஒத்துச் செய்யவேண்டிய த்ரவ்யார்ஜநமும், பகவதாராதநத்திற்காகவே உபயோகப்பட வேண்டு மாதலால், அப்படிப்பட்ட த்ரவ்யார்ஜநமும் இந்தக் காலத்திலேயே ப்ராப்த மாகின்றது.

(3) இஜ்யை :

“ 𑌤𑌤𑍋𑌽𑌷𑍍𑌟𑌾𑌂𑌗𑍇𑌨 𑌯𑍋𑌗𑍇𑌨 𑌪𑍂𑌜𑌯𑍇𑌦𑍍𑌧𑍍𑌵𑌰𑍇𑌶𑍍𑌵𑌰𑌮𑍍 ।
𑌸𑌾𑌯𑌿𑌕𑌂 𑌵𑍍𑌯𑍂𑌹𑌰𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌰𑌿𑌜𑍍𑌯𑌾𑌕𑌾𑌲𑌸𑍍𑌤𑍁 𑌸 𑌸𑍍𑌮𑍃𑌤𑌃 । ”

[பிறகு அஷ்டாங்க யோக புரஸ்ஸரமாகப் பகவானைப் பூஜிக்க வேண்டும். அதற்கு இஜ்யை என்று பெயர்.] மாத்யாஹ்நிக கர்மங்களைச் செய்துவிட்டு பிறகு இந்தப் பூஜையைச் செய்யவேண்டு மென்பது தாத்பர்யம்.

(4) ஸ்வாத்யாயம் :

“ 𑌶𑍍𑌰𑌵𑌣𑌂 𑌚𑌿𑌨𑍍𑌤𑌨𑌂 𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾 𑌤𑌥𑌾 𑌪𑌾𑌠𑌃 𑌸𑌚𑌿𑌨𑍍𑌤𑌿𑌤𑌮𑍍 ।
𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯 𑌸𑌂𑌜𑍍𑌞𑌂 𑌤𑌦𑍍𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌕𑌾𑌲𑌾𑌂𑌶𑌂 𑌚 𑌨𑌿𑌸𑍍𑌥𑌃 ॥ ”

[பிறகு அபராஹ்நத்தில், பகவத் கதைகளின் ச்ரவணம், அவைகளைப்பற்றிய சிந்தநம், பகவானைப்பற்றிய க்ரந்தங்களின் படநம் இவையெல்லாவற்றையும் செய்யவேண்டும். இதற்கு ஸ்வாத்யாயம் என்று பெயர்.]

(5) யோகம் :

“ 𑌦𑌿𑌨𑌾𑌵𑌸𑌾𑌨𑍇 𑌸𑌂𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍇 𑌪𑌞𑍍𑌚𑌜𑌾𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌸𑌮𑌾𑌹𑌿𑌤𑌃 ।
𑌯𑍋𑌗𑌂 𑌨𑌿𑌶𑌾𑌵𑌸𑌾𑌨𑍇 𑌚 𑌵𑌿𑌶𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑍇𑌰𑌨𑍍𑌤𑍇 𑌕𑍃𑌤𑌂 ।
𑌪𑌞𑍍𑌚𑌮𑍋 𑌯𑍋𑌗𑌸𑌂𑌜𑍍𑌞𑌸𑍍𑌤𑍁 𑌕𑌾𑌲𑌾𑌂𑌶𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌦𑌃 ॥ ”

[ஸாயங்கால ப்ராப்தங்களான ஸ்மார்த்த கர்மங்களைச் செய்து விட்டு, யதோசிதம் பகவந்நிவேதநம் முதலிய கார்யம் முடிந்த பிறகு விச்ரமத்தை அடையும் முன்னதாகப் பகவானை உபாஸிக்க வேண்டும். இதற்கு யோகம் என்று பெயர்.]

இம்மாதிரி ஒவ்வொரு திநத்தையும் ஐந்தாகப் பகுத்து சாஸ்த்ரங்கள் சொல்லுகிறபடி கர்மங்களை யதாக்ரமம் அநுஷ்டித்து வந்தால்,

"ப்ரதத்யாச்ச்ரியா ஸ்ரீமௌஷ்ட தந்நிஷ்டாநாம் ஸாம்பதம்"

என்கிறபடி, பகவான் நம்மிடத்தில் த்ருப்தியடைந்து பரம புருஷார்த்தத்தைக் கொடுக்கிறான் என்றும் இந்த சாஸ்த்ரம் போதிப்பிக்கின்றது. இக்காலத்தில் இம்மாதிரியான அநுஷ்டாநம் லௌகிக வ்யாபாரத்தில் ப்ரவ்ருத்தித்திருக்கும் அஸ்மதாதிகளுக்கு ஸாத்யமில்லை யென்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். ஆனாலும், இப்பொழுது, யதாசக்தி இவைகளை அநுஷ்டித்து, பிறகு விராமம் கிடைக்குங் காலத்தில் யதோக்தமாகப் பரிபாலித்து வந்தால், நம்மிடத்திலுள்ள ஏற்றக்குறைவுகளைக் கணிசியாமலே பகவான் நமக்கு ச்ரேயஸ்ஸைக் கொடுப்பான் என்பதில் ஐயமில்லை.

இவை யெல்லாவற்றையும் சொல்வதுடன், ஸ்ரீ பஞ்சராத்ர சாஸ்த்ரம் மற்றும் ஒரு அவதாரத்தைப்பற்றியும் பேசுகிறது. அதாவது - அர்ச்சாவதார மென்பது தான். கோயில்களிலும் மற்றை இடங்களிலும் பகவான் விக்ரஹ ரூபியாக எழுந்தருளியிருப்பதையே நாம் அர்ச்சாவதாரமென்று சொல்கிறோம். இந்த அவதாரமும் ஆச்ரிதர்களுடைய ஸௌகர்யத்தின் பொருட்டே ஏற்பட்ட அவதாரம். இதைப்பற்றிய விஷயங்கள் பஹுவாக இருக்கிறபடியால் இவ்விடத்தில் அவற்றைப்பற்றி விசாரிப்பது ஸாத்யமாகாது. நமது ஆசார்யர்கள் இந்த அவதாரத்தை விசேஷமாகக் கொண்டாடியிருக்கிறார்கள் என்பதை நாம் மனத்தில் வாங்கிக்கொண்டு, ஆலயாதிகளில் விக்ரஹ ரூபியாகக் காணப்ப

டும் பகவானைப் பகவதவதார மென்று த்யாநித்து நாம் பக்தியுடன் உபாஸித்து வந்தால், இந்த ஶாஸ்த்ரம் இது விஷயமாகச் சொல்லுமவற்றைச் சரியாய் உணர்ந்தவர்களாவோம்.

“ [illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥ ”

[ஹே ரங்கேஶ்வர! நீ கணக்கற்ற அவதாரங்களைச் செய்திருக்கிறாய்; ஆனால் இந்த அர்ச்சாவதாரத்திற்குத் துல்யமாக மற்றொன்றையும் சொல்லமுடியாது. இந்த அவதாரத்தில், மநுஷ்யனால் கல்பிக்கப்படும் குடீ குஞ்சங்களிலும் ஜுகுப்ஸை யின்றிக்கு வஸித்துக்கொண்டு, அவர்களாற் செய்யப்படும் ஆராதநங்களை அதிபோக்யமாகத் திருவுள்ளம் பற்றி, மத்யே ஸம்பாவிதங்களான அபராதங்க ளெல்லாவற்றையும் பொறுத்து, ஸர்வ விஷயங்களிலும் அவர்களிட்ட வழக்காய் எழுந்தருளி யிருக்கின்றாய். இந்த ஸௌஶீல்யத்தைப் பார்க்கப் பார்க்க உன்னை ஆஶ்ரயிக்கும் எங்களுக்கு மெய் மறந்து போவது போலிருக்கின்றதே] என்று ஸ்ரீ பட்டர் இந்த அவதார மாஹாத்ம்யத்தைப் பற்றி புகழ்ந்திருக்கிறார்.

பஞ்சராத்ரத்தின் உபதேஶம் இவ்வாறு இருந்தால், இதை விட நமக்கு ஶ்ரேயஸ்கரமான உபாயமும் உண்டோ? என்று நாம் ஏன் நினைக்கக் கூடாது?

எஸ். வாஸுதேவன்.

# ஸ்ரீ அஹோபிலமும் இரண்டு கந்தர்வர்களும்.

"[illegible] ! [illegible] ।
[illegible] ।"

ஹிமவத் பர்வதத்தில் வஸிக்கும் மதுராலாபன் வல்குபாஷணன் எனும் இரண்டு கந்தர்வர்கள், கலியுகாதி 5017-ம் ௵-க்குச் சரியான நள ௵ ஆவணி௴ 26உ ஸ்ரீ அஹோபிலத்தில் நடக்கும் ஸம்ப்ரோக்ஷண மஹோத்ஸவத்தைக் கர்ணாகர்ணிகையாகச் செவியுற்று, '[illegible] । [illegible] ।' என்று புராண ப்ரஸித்தி யடைந்த அஹோபிலம் சென்று ஸம்ப்ரோக்ஷணோத்ஸவத்தையும் ஒன்பது ந்ருஸிம்ஹர்களையும் ஸேவித்து க்ருதார்த்தர்களாகலா மென ஸங்கேதம் பண்ணிக்கொண்டு, அதிக வேகமுள்ளதோர் விமாநத்தி லேறி, அஹோபில யாத்ரையாகப் புறப்பட்டு வந்தார்கள். அப்பொழுது, மதுராலாபன் "ஓ! வல்குபாஷண! இதோ ஓர் ஶிவ க்ஷேத்ரம் தெரிகின்றது பார். இவ்விடத்தில் ருத்ரன் ந்ருஸிம்ஹனைக் குறித்துத் தவம் புரிந்து மந்த்ர ராஜஸ்தவத்தைப் பண்ணி ஸ்தோத்ரம் செய்தான்; ஆகையால் இந்த க்ஷேத்ரத்திற்கு 'ருத்ரபுரம்' என்று பெயர் வந்தது. இதோ நம் விமாநத்திற்கு நேராகக் கீழ் ப்ரதேசத்தில் ஓர் பத்தநம் தெரிகின்றது பார். இங்கு, நந்தி தேவர் இருந்து ருத்ரனைக் குறித்து அதே காலத்தில் தவம் புரிந்தான். அப்பொழுது ருத்ரன் ப்ரஸந்நனாய் அவனுக்கு ப்ரதமாதிபத்யத்தையும் இந்த தேசத்

திற்கு 'நந்திபுரம்' என்கிற பெயரையும் அளித்தான். இப்பொழுது இது 'நந்தியால்' என்று வ்யவஹரிக்கப்படுகிறது. இந்த விஷயம் புராணத்தில், '[illegible]' என்னும் ஶ்லோகங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. அஹோ! விமானத்தின் வேகத்தைப் பார். அஹோபிலத்தைக் கிட்டினோம்" என்று சொன்னான்.

பிறகு இருவரும் கீழ் அஹோபிலம் ஸந்நிதியின் ஸமீபத்தில் சென்று, ஆயிரக் கணக்கான பரமைகாந்திகளுடைய கோஷ்டியைக் கண்டு, விநயத்தோடும் பயத்தோடும் விமானத்தை விட்டுக் கீழே இறங்கி ஸந்நிதியுள் சென்றார்கள். அங்கு ஓரிடத்தில் '[illegible]' என்று ஸர்வஜ்ஞன் புகழ்ந்த ஸாம வேத கானத்தையும், மற்றோரிடத்தில் கம்பீர ஸ்வரமான யஜுர் வேத கோஷத்தையும், மற்றுமோரிடத்தில் உபநிஷத் கோஷங்களையும், பின்னுமோரிடத்தில் ஆழ்வார்களின் செவிக்கினிய செஞ்சொற்களையும், வேறோரிடத்தில் இதிஹாஸ புராண ப்ருஹ்மஸூத்ர பாஷ்யாதிகளின் படனத்தையும் கேட்டு, '[illegible]' என்றும், '[illegible]' என்றும் சொல்லுகிறபடி ஸூரிகள் கானம் பண்ணும் பரமபதம் இது தானோ வென்று ப்ரமித்துப் பரமாநந்த பரிதர்களாய், ஶ்ரோத்ரங்கள் ஸபலமாயின வென்று எண்ணிக்கொண்டு முன் மண்டபத்திற்குச் சென்றார்கள்.

அங்கு விசால ரமணீயமாக இருக்கும் கல்பிதமான யாகசாலையின் ஸௌந்தர்யத்தையும், அதில் யதாஶாஸ்த்ரம் நிர்மிதங்களான சயந குண்டத்வாராதிகளின் ஸந்நிவேஶங்களையும், அங்கு விதி விபர்யாஸ மின்றியே ஹோமாதிகளைப் பண்ணும் பாகவத குலோத்

பவர்களான பாஞ்சராத்ரிகளின் அநுஷ்டாந பாடவ வைலக்ஷண்யாதிகளையும், அதன் மத்தியிலுள்ள வேதிகையில் “ [illegible] யான [illegible] ஸாஸ்ரயத்தோடும் திவ்யாயுதங்களோடும் திவ்யாபரணங்களோடும் திவ்ய மஹிஷிகளோடும் திவ்ய ஸிஹ்மாஸநத்தில் எழுந்தருளியிருக்கும் ப்ரஹ்லாத வரதனையும் லக்ஷ்மீ ந்ருஸிஹ்மனையும், அவர்கட்கு அருகில் [illegible] நத்துடனும் ஆநந்த பாஷ்பத்துடனும் ப்ரஶ்ரய விநய ஸாத்வஸத்தோடும் நிற்கிற ஜீயரையும் பார்த்துத் தங்களுடைய ஜந்மமும் கண்களும் க்ருதார்த்தமடைந்தனவாகப் பாவித்துக்கொண்டார்கள். அப்பொழுது வல்குபாஷணன், “ ஓ! மதுராலாப! இத்திவ்ய தேசத்தின் த்ருவ பேரத்திற்கு உத்ஸவ பேரமான லக்ஷ்மீ ந்ருஸிஹ்ம னன்றோ மத்தியில் எழுந்தருளியிருப்பது? இவருக்கு வலது புறத்தில் ப்ரஸந்ந முகத்துடன் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானுடைய திருநாமம் என்ன? இந்தக் கீழ் அஹோபிலத் தெம்பெருமானும் இந்த க்ஷேத்ர மாஹாத்ம்யத்தில் ப்ரஸித்தர் தானே? இதோ இவர்கட்கு அருகில் நிற்கிற ஜீயர் யார்? இவருக்கு இந்த க்ஷேத்ரத்தில் விசேஷ ஸம்பந்த மென்னை? இவைகளை விஸ்தாரமாகச் சொல்ல வேண்டும்” என்று கேட்க, மதுராலாபன் பின்வருமாறு ப்ரதிவசநம் கூறுகின்றனன் :—

“ மித்ரனே! இதோ தெற்குத் திசையில் எழுந்தருளியுள்ள பகவான், ஹிரண்யகஶிபுவினால் ஸமுத்ரத்தில் தள்ளப்பட்டு மலையினால் மூடப்பட்ட ப்ரஹ்லாதனுக்கு எதிரில் வந்து தோன்றின ப்ரஹ்லாத வரதன். இவருடைய வைபவம் ஸ்ரீ விஷ்ணுபுராணத்தில் ப்ரஸித்தம். இந்த ஸந்நிதியின் லக்ஷ்மீ ந்ருஸிஹ்மன், ‘ [illegible] ॥ ’ என்று இந்த க்ஷேத்ர மாஹாத்ம்யத்தில் சொல்லப்பட்ட ஒன்பது ந்ருஸிஹ்மர்களில் சேர்ந்தவரல்லர். இவர் வேங்கடாசல மாஹாத்ம்ய ப்ரதிபாத்யர். ஆகாஶராஜ புத்ரியாய் அவதரித்த பத்மாவதிக்கும் ஸ்ரீநிவாஸனுக்

கும் வைவாஹிகோத்ஸவம் நடந்தபொழுது, பிராட்டி, பகவதாராதந பூர்வகம் ததீயாராதநம் பண்ணித் தன்னைப் பாணிக்ரஹணம் பண்ணிக்கொள்ளுமாறு நியமிக்க, ஸ்ரீநிவாஸனும் இம்மலையிலுள்ள ஒன்பது ந்ருஸிம்ஹர்களுள் ஒருவரான லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனை இங்கு எழுந்தருளப்பண்ணி ஆராதித்து, ததீயாராதநத்தை நடத்திப் பாணிக்ரஹணம் பண்ணிக்கொண்டதாக அப்புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு நிதர்ஶநமாக இதோ தெற்கிலுள்ள மண்டபத்தில் இப்பொழுதும் ஸ்ரீநிவாஸன் எழுந்தருளி யிருக்கிறார் பார். ஆகையால் தான் இம்மண்டபத்தைக் 'கல்யாண மண்டபம்' என்று வ்யவஹரிக்கின்றார்கள். இக்கதையை அநுஸரித்து, விபுவத்தில் ஸ்ரீ சக்ரவர்த்தித்திருமகனால் ஆராதிக்கப்பட்ட ஸ்ரீரங்கநாதனுக்கும், அர்ச்சா ஸமாதியில் ஸ்ரீநிவாஸனால் ஆராதிக்கப்பட்ட இந்த லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுக்கும் ஸாம்யத்தைப் பெரியோர் கூறுவர். "ஸஹ பத்ந்யா விஶாலாக்ஷ்யா நாராயணமுபாகமத்" என்கிறபடி பத்நீ ஸஹிதனாய் ஸ்ரீ ரங்கநாதனை ஆராதித்த சக்ரவர்த்தித்திருமகன், மறுநாளே ராஜ்ய லக்ஷ்மியை இழந்தார். இவரை ஆராதித்த ஓர் மலைவாஸி நித்யம் ஸ்ரீநிவாஸன் ஆனான் என்றும் சிலர் சாடுக்தி. இங்கு நிற்பவர் தான் அஹோபிலம் ஜீயர். இவரோடு 40 - ஜீயர்களாய் இந்த க்ஷேத்ரத்தின் தர்மங்களைப் பரிபாலித்து வருகிறார்கள். இவர்களில் முதன்மையானவர் ஆதிவண் சடகோபஜீயர் என்பவர். அவர் திருநாராயணபுரத்தில் கிடாம்பி கேஶவாசார்யர் குமாரராய் அவதரித்து, பால்யத்திலேயே ஸர்வ ஶாஸ்த்ர விஶாரதராய், காஞ்சீபுரத்தில் நிகமாந்த மஹாதேசிகன் ப்ரஶிஷ்யராய், ந்ருஸிம்ஹோபாஸநத்தால் ஒரு நாழிகைக்கு நூறு ஶ்லோகம் பண்ணும் கடிகாஶதம் அம்மாளிடத்தில் ஶாரீரக பாஷ்யாதி காலக்ஷேபம் பண்ணிக்கொண்டிருக்கும்போது, இச்சிங்கவேழ்குன்றத் தெம்பெருமான் ஸ்வப்நத்தில் சென்று 'கிடாம்பி ஸ்ரீநிவாஸாசார்யரே! நீர் தெய்வமல்லால் செல்லவொண்ணச் சிங்கவேழ்குன்றமேற வந்து, நம்மிடத்தில் ப்ரேஷமந்த்ர துர்யாஶ்ரமாதிகளை ஸ்வீகரித்து, நம் நவமூர்த்திகளில் ஒருவரை நித்யமாக ஆராதித்துக்கொண்டு, க்ராம நகரங்கள்

தோறும் சென்று, ராமாநுஜ ஸித்தாந்தத்தைத் தழைக்கச் செய்யும்' என்று நியமிக்க, அவரும் விஸ்மிதராய், தம் ஆசார்யரிடத்தில் ஸ்வப்நத்தை விஜ்ஞாபித்து, அவருடைய நியமநத்தின் பேரில் இந்த அஹோபிலத்திற்கு வந்து, ஸ்வப்நத்தில் நியமித்தபடி பிக்ஷு ரூபியாய் வந்த லக்ஷ்மீ ந்ருஸிஹ்மனிடத்தில் ப்ரேஷதுர்யாச்ரமாதிகளை ஸ்வீகரித்து, நவமூர்த்திகளில் ஒருவரான லக்ஷ்மீ ந்ருஸிஹ்மனைத் தமக்கு ஆராத்யராக எழுந்தருளப்பண்ணிக்கொண்டு, க்ராமைகராத்ரமாகச் சென்று, தம் அடியார்களைத் திருவிலச்சனை காலக்ஷேப பரஸமர்ப்பணாதிகளாலே உஜ்ஜீவிப்பித்துக்கொண்டு, ராமாநுஜ ஸித்தாந்தத்தைத் தழைக்கச்செய்து வந்தார். அவர், தம் சிஷ்யனாய் இருந்த விஜயநகரம் ராஜாவான முகுந்த தேவராயன் மூலமாக இந்தத் திவ்யதேசத்தின் நித்யோத்ஸவாதிகளை நடத்திவந்தார். அது முதல் இது பர்யந்தம் இந்தத் திவ்யதேசம் பரம்பரையாக அஹோபிலம் ஜீயர்களுக்கு ஸர்வஸ்வாதீநமாய் இருக்கிறது. 'அஹோபிலே ஸ்ரீ ந்ருஸிம்ஹ: ப்ரேஷமந்த்ரம் ஸமந்வதாத்' என்கிறபடி ந்ருஸிஹ்மன் உபதேசித்த ப்ரேஷமந்த்ர பரம்பரை இந்த ஸந்நிதி ஜீயர்களுக்கு வருவதால், பெரியோர் இந்த ஸம்ப்ரதாயத்திற்கு ஏற்றம் கூறுவர்" என்றான்.

பிறகு இருவரும் அந்த ஸந்நிதியை ப்ரதக்ஷிணம் செய்துகொண்டு வருகையில், மதுராலாபன் ஓ! வல்குபாஷண! இந்த நூற்றுக்கால் மண்டபத்தைப் பார். இதிலுள்ள பிம்பங்களின் ஸௌந்தர்யத்தைக் கருது. இந்த மண்டபமும், காஞ்சீபுரத்தில் வரதன் ஸந்நிதியில் பார்த்த நூற்றுக்கால் மண்டபமும் ஆதிவண் சடகோப ஜீயரின் நியமநத்தின்பேரில் முகுந்த தேவராயனால் கட்டப்பட்டன. இந்த ஐதிஹ்யத்திற்கு நிதர்சநமாகக் காஞ்சீபுரம் மண்டபத்தில் ஒரு ஸ்தம்பத்தில் லக்ஷ்மீ ந்ருஸிஹ்மனும் அதற்கு எதிரிலுள்ள மற்றொரு ஸ்தம்பத்தில் ஆதிவண் சடகோப ஜீயரும் இருப்பதை இப்பொழுதும் காணலாம். இந்த மண்டபத்திலும் வ்ருத்த யதியான லக்ஷ்மீ ந்ருஸிஹ்மனையும் அவரிடத்தில் காஷாயாதிகளை ஸ்வீகரித்த ஆதிவண் சடகோப ஜீயரையும் பார்.

இந்த மண்டபம் முடிவதற்கு முன் முகுந்த தேவராயன் காலஞ் சென்றபடியால் இது முடிவை யடையாமல் போய்விட்டது.” என்று சொல்ல, வல்குபாஷணனும் அவைகளைச் செவியுற்று ஸந்தோஷித்தான். பிறகு இருவரும் ஸம்ப்ரோக்ஷத்தின் முடிவையும், அன்று நடந்த கருடோத்ஸவத்தையும் ஸேவித்து க்ருதார்த்தர்களாய், உதித்தவுடனே நவந்ருஸிம்ஹர்களையும் ஸேவிக்கக் கருதி விமாநத்தில் ஏறினார்கள். விமாநம் ஆகாயமார்க்கமாய்ப் போய்க் கொண்டிருக்கையில், மதுராலாபன் “ஓ! நண்ப! இதோ மேற்கில் ஒரு குளம் தெரிகின்றது பார். இதற்கு ‘ஆழ்வார் கோனேரி’ என்று பெயர். இதோ தெற்கில் விசித்ரமான கட்டிடத்தோடு ஓர் நடவாபி தெரிகின்றதே. இதற்கு ‘லக்ஷ்மீ தீர்த்தம்’ என்று பெயர். இதோ கிழக்கிலுள்ள தீர்த்தம் ‘ஹநுமத் தீர்த்தம்.’ இதோ கிழக்காக ஸ்ரீ வைஷ்ணவ ஸங்கம் போகின்றது பார். அதனுடன் நாமும் போவோம். அங்கு இரண்டு மைல் தூரத்தில், ‘ஸாமுத்³ராஸ்யம் பா⁴ர்க³வக்ஷேத்ரம் புண்யம் ஸர்வாக⁴நாஶநம் । தத்ரைவ ஸர்வபாபக்⁴நம் தீர்த²ம் பா⁴ர்க³வஸம்ஜ்ஞிகம் ॥ ததா² ஸ்தம்பே⁴ ஸமுத்³பூ⁴தோ ஸர்வஸித்³தி⁴ப்ரதோ ந்ருகேஸரீ’ என்றும், ‘ஸாமுத்³ரே தீர்த²ராஜே ச ஸ்வாமீ ஹோ நரகேஸரீ’ என்றும் சொல்லப்பட்ட மஹா புண்யமான பார்க்கவ க்ஷேத்ரமும், அமோகமாய் லோக பாவநமுமான பார்க்கவ தீர்த்தமும் இருக்கின்றன. அங்கு ஸமீபத்திலுள்ள ஓர் மலையில் பார்க்கவ ந்ருஸிம்ஹன் ஸர்வாபீஷ்டப்ரதனாய் எழுந்தருளியிருக்கிறார். அவரை விமாநத்தினின்றே ஸேவிப்போம் வா. இதோ, கீழ் அஹோபிலம் ஸந்நிதிக்கு ஆக்நேயத்தில் ஓர் ஸந்நிதி தெரிகின்றது பார். இது யோகாநந்த ந்ருஸிம்ஹன் ஸந்நிதி. இவர் யோக பட்டையுடன் ஸேவை ஸாதிக்கிறார். இவர் ப்ரஹ்லாதனுக்கு யோகாப்பாஸத்தைப் பண்ணிவைத்தபடியால் ‘யோகா ந்ருஸிம்ஹன்’ என்று பெயர் பெற்றார். இதை ‘வேதா³த்³ரே: பஶ்சிமே பா⁴கே³ ஸ்தா²நம் ஶுப⁴ம் । த³க்ஷிணாபி⁴முகோ² தே³வோ யோகா³நந்த³ ந்ருகேஸரீ । யோகா³ப்⁴யாஸம் ச குர்வாண ப்ரஹ்லாத³ஸ்ய ஸஹா

𑌤𑍍𑌯𑌜𑌨𑌃 । 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌪𑍍𑌰𑌭𑍃𑌤𑌿 𑌲𑍋𑌕𑌾𑌨𑌾𑌂 𑌪𑌾𑌵𑌨𑌂 𑌨𑌾𑌮 𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌥𑌿𑌤𑌂' என்னும் புராண ச்லோகங்களாலும் காணலாம். இதோ அதற்கு ஒரு மைல் மேற்கில் பாகவதர்களின் கூட்டம் போவதைப் பார். அங்கே தான் சத்ரவட ந்ருஸிம்மன் ஸந்நிதி. அவர் இந்த்ராதி ஸேவித பதபங்கஜராய்க் கிழக்கு முகமாக நின்று லோகத்தை அநுக்ரஹிக்கிறார் என்று '𑌤𑌯𑌾 𑌸𑌤𑍍𑌰𑌵𑌟𑌂 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌂 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰𑌾𑌪𑌿 𑌪𑌾𑌪𑌹𑌂 । 𑌯𑌤𑍍𑌰𑌾𑌸𑍍𑌤𑍇 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌪𑍍𑌰𑌾𑌜𑍍𑌞 𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑍋 𑌦𑍈𑌤𑍍𑌯𑌕𑍇𑌸𑌰𑍀 ॥' என்னும் புராண ச்லோகத்தால் ஸ்துதிக்கப்பட்டவர். ஸமீபத்தில் சென்று ஸேவிப்போம் வா. இதோ ஸேவார்த்திகள் கர்ப்பூரம் முதலான உபஹாரங்களைக்கொண்டு கையில் தீவட்டியுடன் ஸந்நிதியில் ப்ரவேசிக்கிறார்கள் பார். இங்கே மிகவும் இருட்டாகையால், தீபமில்லாவிடில் பகவத் ஸேவை கிடைப்பது அரிது. இவருடைய ஸௌஷ்டவம் மற்ற எட்டு ந்ருஸிம்மர்களுக்கும் இல்லை. இங்கு ஸமீபத்தில் வந்து ஸேவி. ஆனால் இந்த ஸந்நிதி புற்றினால் ஆக்ராந்தமாய் விட்டது. இனி எப்படியாகுமோ? இந்த மூன்று திவ்யதேசங்களும் கீழ் ஸந்நிதிக்குச் சுமார் இரண்டு இரண்டரை மைல் தூரத்தில் உள்ள குன்றுகளில் இருக்கின்றன. இனி மேலே போவோம் வா" என்று சொல்லிக்கொண்டே மேல் அஹோபிலம் சென்றார்கள்.

(இன்னும் வரும்)

அஹோபில யாத்ரை செய்த பௌராணிகர்.

# ஜநகநந்திநீ.

வைசாக உத்ஸவம் வழக்கப்படிதான் நடந்தது. வேதகோஷ்டியும் அவ்விதமே நடந்தேறிற்று அத்யாபக கோஷ்டிகளும் அப்படியே. போலீஸ் கோஷ்டியும் பழையபடியே. கலகங்களும் முன் போலவே. அதிகாரிகளும், அயலூர்களைக் காட்டிலும் அவ்வூரில் தம் உத்யோகம் பெருத்ததாக வெண்ணி வ்யாபரித்தார்கள். ஸேவார்த்திகளின் கூட்டமும் முன்போலவே தான். பகவானும், நவம்நவமாகவும் அதிகம் அதிகமாகவும் திருமேனியின் பேரழகையைத் தரித்தான். ஒன்றும் குறைவுபட்டதன்று. ஆகிலும் இவையாவும் கானிடை வதியக் கருத்துடையார்களான கேசவாசார்யர் இல்லத்தவர்க்கும் ஸ்ரீநிவாஸனுக்கும் களிப்பளிக்கின்றன வில்லையே! வஸ்துக்கள் வஸ்து ஸ்வபாவத்தால் ஸுககரமாகவும் துக்ககரமாகவும் பரிணமித்தலில்லை. போக்தாவின் சித்த ஸ்வபாவத்தால் அவற்றிற்கு ஸுகதுக்க ஹேதுத்வம் சொல்லப்படுகின்றது. வஸ்துக்களை த்யாகம் செய்ய, ஸமர்த்தர்க்குப் பரமார்த்த வஸ்துவான வரதன், எத்துணையும் பரமபோக்யமான பொருள் ஆகின்றான். அந்த மனோநிலை ப்ரயத்நத்தாலும் அப்யாஸத்தாலும் யாரோ ஒருவர்க்கு உண்டாகத்தக்கது. அப்படிப்பட்ட அதிகாரி கேசவாசார்யர். ஆகிலும், அவர் ஜநகத்தை நினைத்தாராகில் உடனே கொஞ்சம் சித்தகாலுஷ்யம் அடைவர்.

ஜநகம் ஸன்மார்க்கத்தில் வளர்க்கப்பட்டாள். அவள் பாரமைகாந்த்யத்தை அடைவதற்குத் தக்க ஸாமக்ரியை ஸம்பாதித்தாள். ஆனாலும், ப்ரக்ருதி ஸம்பந்தம் எளிதில் ஜயிக்கக்கூடியதன்று. தனக்கு நேர்ந்த கஷ்டத்தை நினைத்து நினைத்து உருகினின்றாள். ஆகாரத்தில் ருசிகொண்டாளில்லை. நித்ரை அவளுக்கு ஸுலபமாக வந்ததில்லை. அவள் வேண்டுமென்று இச்சிக்காமலே அவளுடைய சரீரம் இளைத்தது. வேறெங்கும் காணாதவண்ணம் அவள் முகத்தில் விளையாடிய காந்தியானது குறைவுபட ஆரம்பித்தது.

அதைக் கேசவாசார்யர் கண்டார்; வருத்தம் கொண்டார். அதற்குத் தக்க பரிஹாரம் அவர் யோசனைக்கு எட்டவில்லை.

உத்ஸவம் கழிந்தபிறகு ஒரு நாள் மத்யாஹ்நம் கேசவாசார்யர் நடைத் திண்ணைமீது உட்கார்ந்து புஸ்தக நிரீக்ஷணம் செய்துகொண்டிருக்கையில், ஜநகநந்தினி வந்து ஸேவித்தாள்; எழுந்து நின்றாள்.

"குழந்தாய்! என்ன வேண்டுகின்றாய்?" என்றனர் கேசவாசார்யர்.

"அப்பா! என் மநஸுக்கு ஆறுதல் உண்டாகவில்லை" என்று சொன்னாள் ஜநகநந்தினி.

"பகவத் பக்தி வளரவும் வைராக்யம் நிலைப்படவும் ஸ்ரீ பாகவதம் வாசிக்கலாமே! முன்னமே என்னிடம் அதை நன்றாய்ப் படித்திருக்கின்றாயே! ஸர்வ லோகத்தார்க்கும் ஹ்ருதயங்கமனான வாஸுதேவன் திவ்ய கதைகள் உனக்குச் சித்த வஶ்யதையை அளிக்குமே. ஸ்ரீ பகவத் விஷயத்தைச் சிந்திக்கக் கூடாதோ! ஆழ்வாருடைய அநுபவத்தில் ஏகதேசம்கூட பரம ஶாந்தியை உனக்கு உண்டாக்குமே! மாயையின் கட்டைத் தளரச்செய்யுமே! பகவானுடைய தர்ஶந ஸமாநமான ப்ரத்யக்ஷத்தையும் தந்திடுமே! நாமிருவரும் சேர்ந்து பகவத்குணாநுபவம் செய்யலாமா?" என்று கூறினார் கேசவாசார்யர்.

"இதெல்லாம் செய்யலாம். என் சித்தம் என்னை அந்த வழிகளில் போகவொட்டாது. அவ்விதம் ப்ரயத்நம் செய்தேன். அது முடியவில்லை. இன்ன விதமென்று தெளியவொட்டாமலே ஒரு க்லேசம் என் உள்ளத்தில் குடிகொண்டது. எவ்வளவு படித்தாலும் எம்மட்டும் கேட்டாலும் அதற்குப் பரிஹாரம் உண்டாகமாட்டாதுபோல் தோன்றுகின்றது. எனக்கு வேறு ஆஶ்ரயமிலது. ஆதலால் தேவரீரை இவ்வண்ணம் வருத்துகின்றேன்" என்று ஜநகநந்தினி சொன்னாள்.

கேசவாசார்யர் அச்சொற்களைக் கேட்டார். என் செய்வர்? எவ்வளவு தத்வஜ்ஞாநம் ஸம்பாதித்தால் என்ன? அந்த ஸமயத்துக்கு அது உதவவில்லை. அவர் பெற்றெடுத்த கண்மணியானவள் ஶோகத்தில் மூழ்கி எதிரே நின்றாள். அவர் வித்யாப்ரதாநம்

பண்ணின பெண்மணியானவள் ஒரு போக்கும் அற்றவளாய் அவரைப் பரிஹாரம் கேட்கின்றாள். எவ்வளவு தூரம் யோசித்த போதிலும் உலகவழியில் அவளுக்குப் பரிஹாரம் இல்லை.

“அம்மா! உனக்காக நான் என்ன செய்ய வேண்டுகின்றாய்? இந்த லோகத்தில் நம்மைக் காப்பாற்றுவார் இல்லை. பேருளாளனைச் சரணமடைவாயாக. அவனைத் தவிர நமக்கோர் துணையில்லை” என்று சொன்னார்.

“அப்பா! இங்கே இருக்க எனக்கு ப்ரியமில்லை. தேசாந்தரம் போவோம். நூதனமான காட்சிகளைக் கண்டு என் துக்கத்தை சமிப்பிக்கப் பார்க்கின்றேன்” என்று சொன்னாள் ஜநகநந்தினி.

“குழந்தாய்! திவ்யதேசயாத்ரை செய்யலாமா? அங்கங்கே சென்று பெருமாளுடைய திவ்ய மூர்த்திகளுடைய தர்சநம் செய்யலாமா?” என்று கேட்டார் கேசவாசார்யர்.

“அதைத்தான் வேண்டுகின்றேன்” என்றாள் ஜநகம்.

“அம்மா! அப்படியே செய்வோம்” என்றார் கேசவாசார்யர். ஜநகம் உள்ளே போனாள்.

கேசவாசார்யர், பிறந்த நாள் முதல் காஞ்சீபுரத்தை விட்டு வெளியில் சென்றதில்லை. அவர் உபாஸித்த தெய்வம் வரதனே. மற்றோரிடத்தில் பகவானுடைய அர்ச்சாரூபமான மூர்த்தியை அவர் தர்சித்ததில்லை. தூம்சகடம் ஏறினதில்லை. தேசாந்தர ஸஞ்சாரம் செய்ய அவர் அத்யந்தம் அசக்தர். என் செய்வர்! வழக்கப்படி அன்றிராத்ரி பகவத் ஸந்நிதிக்குப் போகும்போது, பத்மநாபாசார்யருடன் யோசிப்பதாக எண்ணி முடித்தார்.

ராத்ரி ஸந்நிதியில் கேசவாசார்யரைப் பத்மநாபாசார்யர் பார்த்து, “ஸ்வாமிந்! குழந்தை என்னமாயிருக்கின்றாள்?” என்று விசாரித்தார்.

“கஷ்டப்படுகின்றாள்; ஆச்வாஸநம் இல்லை. எங்கேயாவது போகவேண்டுமென்று சொல்லுகின்றாள். திவ்ய தேச யாத்ரையாக அழைத்துக்கொண்டு போவதாய்ச் சொல்லி ஸமாதாநப்படுத்தியிருக்கின்றேன். அதை எப்படி ஸாதிப்பேனோ தெரியவில்லை” என்று கேசவாசார்யர் சொன்னார்.

"தேவரீருக்கு அது மிகவும் கஷ்டமாச்சுதே. தேச ஸஞ்சார மென்பதே தேவரீர் அறியமாட்டாதே. தூமசகடம் ஏறி ப்ரயாணம் செய்ய ஸம்மதிக்குமோ?" என்றார் பத்மநாபாசார்யர்.

"தூமசகடம் ஏற எப்படித் துணிவேன்? அதனால் ஸம்பவிக்கும் தீட்டையும் எச்சிலையும் எவ்வண்ணம் ஸஹிப்பேன்? லோகத்தார் பழிப்பு ஒரு பக்கம் இருக்கட்டும். அடியேனுக்கு நினைக்க அருவருப்பா யிருக்கின்றதே" என்று சொன்னார் கேசவாசார்யர்.

"கஷ்ட காலங்களில் மஹரிஷியர்களும் விதியில்லாமல் தூமசகடம் ஏறுகின்றார்கள். இது தேவரீர்க்குக் கஷ்டகாலமே. ஆனாலும் தேவரீர் தனியே ப்ரயாணிக்க முடியாது. அடியேன் தேவரீருடன் வருகின்றேன். தேவரீருடைய யசஸ்ஸு விபுலமானது. அதைக்கொண்டு தேவரீரை யதாஸுகம் அழைத்துக்கொண்டு போகின்றேன்" என்று சொன்னார் பத்மநாபாசார்.

"தேவரீருடைய யோகக்ஷேமங்களை யெல்லாம் கைவிட்டு அடியேனுடன் ப்ரயாணிக்க ஸம்மதிக்கின்றதே! தேவரீரைப் போல் பரம ஸுஹ்ருத் ஆருண்டு? தேவரீருடைய உபகாரத்தை நிராகரித்து ப்ரயாணம் செய்யவும் அடியேன் அசக்தன்" என்று கேசவாசார்யர் சொன்னார். இவ்வண்ணம் திவ்ய தேசஸஞ்சாரம் ஜநகநந்தினிக்கு அமைந்தது.

ஒரு வாரத்துக்குள்ளாகக் கேசவாசார்யரும் ஹரிப்ரியையும் ஜநகநந்தினியை அழைத்துக்கொண்டுப்ரயாணப்பட்டார்கள். ஜநகநந்தினியின் கல்யாணத்துக்கும் கஷ்டத்துக்கும் தாம் வ்யாஜமாக நினைத்த பத்மநாபாசார்யரும், கேசவாசார்யரிடம் தமக்குண்டாயிருந்த பரமஸ்நேஹத்தின் காரணத்தையிட்டு அவர்களுடன் ப்ரயாணப்பட்டனர். அவர்கள் ப்ரயாணம் செய்த க்ரமத்தில் தூமசகடத்தின் நிர்ப்பந்தங்களை விசேஷமாக அநுபவிக்காமல் சென்றார்கள்.

முதலில் ஸ்ரீமதுராந்தகம் வந்து சேர்ந்தார்கள். ஸ்நாநார்த்தம் யாவரும் அந்த ஊர் தடாகம் சென்றார்கள். ஜநகம் தடாகத்தைப் பார்த்தாள். அவ்வளவு விஸ்தாரமான ஜலாசயத்தை அவள் என்றும் கண்டவள் அல்லள். அதைக் கண்டு அவள் விஸ்மயம் கொண்

டாள். அவள் மனஸ்ஸை அது ஆகர்ஷித்தது. அதில் நீராடி த்ருப்தி யடைந்தாள்.

கேசவாசார்யருடைய வ்யாதியும் கஷ்டமும், ஸமீபதேசமானபடியால், மதுராந்தகத்தில் யாவர்க்கும் தெரிந்தவையே. ஸ்த்ரீ புருஷர்கள் எல்லோரும் அவரையும் ஜநகத்தையும் நன்றாகப் பார்த்தார்கள். வாடின புஷ்பம்போன்ற அவள் முகத்தையும், ஸத்வ்ருத்தத்தில் படிந்தவளெனக் காட்டும் அவள் நடையையும் பார்த்த ஜநங்கள், 'சந்திரனைப் பழிக்கப்பெற்ற பருவத்தாளை, அருள் நிறைந்த நாட்டத்துடன் கூடிய அக்கண்ணினளை, மயிலின் தோகையைப்போல் விளங்கும் அக்கூந்தலுடையாளை, மண்ணெல்லாம் செய்த புண்ணிய மனைத்தும் திரண்டு பலித்தாற்போல் வந்துதித்த அக்கீர்த்தி பொருந்திய பெண்மணியைப் பெற்றும் இழப்பதோர் துர்பாக்யம் உண்டோ? இதற்கும் துணிவதோர் வைராக்யம் உண்டோ? ஆனதற்கு ஆகாததைக் கொண்டிணைத்த ஈசன் செயல் என்ன விபரீதம்!!' என்று ஸம்பாஷித்தார்கள்.

மத்யாஹ்நம் பகவத் ஸேவார்த்தம் ஸந்நிதிக்குக் கேசவாசார்யர், பத்மநாபாசார்யர், ஹரிப்ரியை, ஜநகநந்தினி முதலானோர் போனார்கள். ஸீதாலக்ஷ்மண ஸமேதனான ராமபத்ரனைத் தர்ஸித்தார்கள். பிறகு இருப்பிடத்துக்குத் திரும்புங்கால், கேசவாசார்யர் பெண்ணைப் பார்த்து இவ்வண்ணம் மொழிந்தார் :—

"ஜநகம்! பெருமாளை ஸேவித்தையே! இதன் ப்ரயோஜநத்தைப்பற்றிச் சிந்திக்கின்றையோ? ஸீதா லக்ஷ்மணர்களுடன் ஸ்ரீ ராமன் அரண்யவாஸம் செய்தார். பகவான் ராக்ஷஸர்களால் அமரர்கள் அடைந்த துயரத்தை நிவர்த்திக்க அவதரித்தாரென்பார்கள். அதுவே அவதார ப்ரயோஜநமன்று. அவரை த்யானித்துத் தபஸ் செய்த ருஷிகளுக்கு ராவணாதிகளால் ஸம்பவித்த உபத்ரவத்தை நீக்கி, அவர்களுடைய த்யாநம் ஸுகரமாய் வளரும்படியும், அவர்களுடைய கரணங்கள் விஷயங்களில் பாய்ந்தோடாம லிருக்கவேண்டியும், நீருண்ட மேகம் போன்ற திருமேனியையும், செந்தாமரைக் கண்களையும், தநுஸ்ஸையும் சரத்தையும் ஏந்திய கைகளையும், அவர்க்கு த்யாநவிஷயமாகக் காட்டியருளினர் என்பார்கள். அதுவே அவதார ப்ரயோஜநமன்று. லோகத்தில் ப்ரியத்தைத் தேடும் பலர்க்கு அது கிட்டுவதில்லை,

அப்ரியத்தை விலக்கவேண்டி முயல்வோர்க்கும் அது விட்டுப் போவதுமில்லை. இந்த ஜகத்தானது துக்கமயமானது. துக்காநுபவம் பண்ணும் ஜநங்கள் அது பகவத்க்ருபையால் உண்டாகின்றதென்று நினைப்பது துர்லபம். கர்மம் கழியும் மார்க்கம் அதுவேயாம். பகவான் ஸ்வதந்த்ரன். 'ரஸோ வை ஸ꞉, ரஸꞱ ஹ்யேவாயம் லப்த்வாநந்தீ பவதி' என்று உபநிஷத் சொல்லிற்று. அவன் ஶுத்த ஆநந்தஸ்வரூபி. அவனை யடைந்த சேதநன்தான் நிஜமாக ஆநந்தமடைந்தவனாகின்றான். அப்படிப்பட்ட ஆநந்தமயனை ஸர்வேச்வரன், க்ரமமாக ப்ராப்தமான ராஜ்யத்தைப் பெறுங்காலே இழந்தான். ஸாதாரண ஜநங்களைப்போல் ஜீவிக்கப் பொருந்தாமல், அவனுக்கு வநவாஸம் ஏற்பட்டது. வநத்தில் போய் வஸிக்குங்கால், பத்நீயை ராவணன் அபஹரித்தான். அப்பழிப்பட்ட ராவணனைத் தடுக்கச்சென்ற மஹா ஸுஹ்ருத்தான ஜடாயுவானவர் ராவணனால் கொல்லப்பட்டார். "இப்படிப்பட்ட எனது அலக்ஷ்மீயானது நெருப்பையும் கொளுத்திவிடும்" என்று ஸ்ரீ ராமனே சொன்னார். மஹா ஸங்கடங்களையெல்லாம் கடந்து, பகு ப்ரயத்நத்தாலே ராவணாதிகளை ஸம்ஹரித்து, ஸீதையை மீட்டனர். ராக்ஷஸ க்ரஹத்தில் அவள் வஸித்தாள் எனும் அபவாத ப்ராயச்சித்த நிமித்தமாகவும், லோகத்தார் அவள் பதிவ்ரதை என்று விச்வஸிக்கும்படியாகவும், ஸீதை அக்நிப்ரவேசம் செய்கையில் உபேக்ஷயாக நின்றார். பிறகு ராஜ்யத்தில் பட்டாபிஷிக்தராய் இருந்தவளவில், ஜநங்களுக்குள் ஸீதா ஸம்பந்தமான அபவாதம் நிலைத்திருப்பதைக் கண்டு, ஸீதையை விவாஸநம் செய்துவிட்டுத் தனியாக ராஜ்யபாரம் செய்தார். பிறகு லக்ஷ்மண வியோகமும் நேரிடவே, துக்கம் முற்றுப் பெற்றதாகத் தெரிந்துகொண்டு, மஹா ப்ரஸ்தாநமெனப்பட்ட விதியை ஆச்ரயித்துத் தமது விஷ்ணு ஸ்வரூபத்தில் லயித்தனர். த்யாக நிமித்தமாகச் சித்தத்துக்கு மிகவும் பரிதாபாச்ரயமென்று மஹர்ஷிகளால் நிச்சயிக்கப்பட்ட ஸ்ரீராமசந்த்ரன் துக்கமயமானதோர் ஜீவநத்தை அவலம்பித்தார். அதற்குக் காரண மென்னவென்றால், சரீரப்ராப்தியானது யாவர்க்கும் துக்கமயமானதென்று காட்டவேண்டுமென்பதே. ஜந்மம், மரணம், வ்யாதி, ஜரை, அநிஷ்டப்ராப்தி, இஷ்ட வியோகம், அநீசத்வம், இம்மாதிரியான துக்க ஸஹஸ்ரங்களை யநுபவிக்காதவர் யாவர்? இன்னும், "எவனை அநுக்ரஹிக்க ஸங்

கல்பிக்கின்றேனே, அவனுடைய வித்தத்தை ஹரிக்கின்றேன். அவனுக்கு ஸதா பந்துவியோகத்தை உண்டாக்குவேன். இவ்வண்ணம் கஷ்டப்படுகையில் அவனுக்கு என்னிடம் பக்தி நிலைத்ததாகில், இந்த்ராதிகட்கும் கிட்டாத ப்ரஸாதத்தை அவனிடம் செய்வேன்" என்று பகவான் தாமே சொன்னாரன்றோ? இவ்வண்ணம் ஸ்ரீராமசந்த்ரனுடைய அவதாரமானது துக்கப்பட்டவர்களுக்கெல்லாம் துக்கமே பகவத்ப்ராப்தி ஹேதுவாகலாம் என்று காண்பிக்கவென்று தோன்றுகின்றது. குழந்தாய்! நீயும் உன் வ்யஸநத்தை ஜயித்தவளாய்க்கொண்டு, பகவத்க்ருபையானவள் உனது ரக்ஷணார்த்தம் அவஸர ப்ரதீக்ஷையாய் நிற்கின்றாளென்று தைர்யம் கொள்ளவேண்டும்.

இவ்வண்ணம் ஸம்பாஷித்துக்கொண்டே கேசவாசார்யர் முதலானோர் இருப்பிடம் போய்ச் சேர்ந்தார்கள். மதுராந்தக வாஸம் நாலு நாள் செய்து, பின் திருவஹீந்த்ரபுரம் சென்றனர். அங்கே கருடநதியில் தீர்த்தமாடி, நித்யகர்மங்களைச்செய்து முடித்தார்கள். தேவநாதனை ஸேவித்துப் பின் மலை மீதேறி ஹயக்ரீவனையும் வணங்கினார்கள். அதன் பிறகு, இருப்பிடம் நோக்கித் திரும்பும்போது, கேசவாசார்யர் ஜநகநந்தினியைப் பார்த்துச்சொல்லவாரம்பித்தனர்:—"ஜநகம்! ஜ்ஞாநத்தாலும் வைராக்யத்தாலும் நம்முடைய பூர்வாசார்யர்களுக்குள் ஸர்வோத்க்ருஷ்டமான ஸ்தாநத்தை அடைந்த நிகமாந்தமஹாதேசிகன் உகந்தருளிய ஔஷதாத்ரி எனப்பட்ட குன்று இது. ஆசார்யோபதிஷ்டமான வைநதேய மந்த்ரஸித்தியின் பொருட்டுத் தேசிகன் இவ்வரையை அடைந்தனர். இங்கே வைநதேயன் தேசிகனுக்கு ப்ரத்யக்ஷமாகி ஹயக்ரீவ மஹா மந்த்ரத்தை உபதேசித்தார். அம் மந்த்ரஸித்தியைப் பெற்றுத் தேசிகன், ஹயக்ரீவனுடைய விசேஷ கடாக்ஷத்தையும் இவ்விடம் பொருந்தினர். ஆதலால் இந்த ஸ்தல விசேஷம் மந்த்ரஸித்தியையும் தேவதாப்ரத்யக்ஷத்தையும் வேண்டுகின்றவர்கள் சாருமிடம். இங்கே ஸர்வேச்வரன் தேவநாதனெனத் திருநாமம் கொண்ட காரணத்தை யோசிப்பாய். பெருமாள் கோவிலில் தேவாதி ராஜனெனக் கொண்டாடப்படுகின்றான். ஏனென்றால், அங்கே அவன் அயர்வறு மமரர்கட் கதிபனாய் விளங்குகின்றான். இங்கே அந்த அமரர்களால் அதிஷ்டிதங்களான

இந்த்ரியங்கட்கு ஈசனுய் விளங்குகின்ருன். அதனுல் பரமபுருஷனுக்கு ஹ்ருஷீகேசன் என்றும் திருநாமமுண்டு. அவன் இந்தத் திவ்ய தேசத்தை யாப்ரயித்து, இந்த்ரியஜயத்தை அபேக்ஷித்துத் தன்னை உபாஸித்தவர்களுக்கு அதையும் தந்தருளினுன். ஆதலால், தேசிகன் இந்தத் திவ்யதேசத்தில் மிகவும் உகந்தனர். நீயும் தேவநாதனை ப்ரார்த்தித்தாயாகில் மநஸ்ஸை ஜயிப்பாய். இந்த்ரியங்கள் உனக்கு வப்யமாய் நிற்கும். வைராக்யமும் உன் சித்தத்தில் நிலைகொள்ளும்'' என்றிவ் வண்ணம் தன் புத்ரிக்குக் கேசவாசார்யர் உபதேசம் செய்தார்.

அவ்விடம் நாலு நாள் இருந்து, திருக்குடந்தைக்குச் சென்ருர்கள். உப்பிலியப்பன் கோவிலுடைய அதிஸாமீப்யத்தால், அவ்விடம் ஒரே நாள் தான் இருந்தார்கள். ஆராவமுதனை ஸேவித்துவிட்டு இறங்கியிருந்த வீட்டுக்கு வரும்போது கேசவாசார்யர் பெண்ணைப் பார்த்து இவ்வண்ணம் ஸம்பாஷித்தார்:—'' குழந்தாய்! இங்கே பெருமாளை ஸேவித்தையா? ஸர்வேப்வரன் இவ்விடம் திருக்கோயில் கொண்டருளி யிருக்கின்ருன். இங்கே அவனுடைய திவ்ய மங்கள விக்ரஹத்தை அபர்யாப்தாம்ருதம் [அதாவது - ஆராத அம்ருதம்] என்பார்கள். ஹ்ருதயாகாசத்தின் மத்யத்தில் யாவற்றையும் தன் வசமாக்கி நிற்பவனும், யாவற்றையும் தனக்கு பேஷமாயுடையவனும், யாவற்றையும் ஆள்பவனும், எல்லார்க்கும் ரக்ஷகனுமான பகவான் பயநிக்கின்ருனென்று வேதம் சொல்லுகின்றது. அவனுடன் கூடவே ஜீவனும் அங்கே இருப்பதாகவும் சொல்லுகின்றது. ஆனுல் ஜீவன் இந்த்ரிய ஜயமற்றவனுய் விஷயாஸக்த மநஸ்கனுய் ஸம்ஸரித்துக்கொண்டும் துக்கப்பட்டுக்கொண்டும் காலங் கழிக்கின்ருன். இவற்றுள் நிர்வேதம் பிறந்து, இவற்றை முற்றிலும் துறந்து, தன்னுடனே ஹ்ருதய குஹையில் ப்ரகாசிக்கின்ற தனது ஈபனை முழுபக்தியுடன் எப்போது காண்கின்ருனே, எப்போது, தான் முன் களித்துத் தேடிய ப்ருக்ருதியின் விசாரங்களையெல்லாம் அந்தக் கர்மாத்யக்ஷனுடைய மஹிமை யென்று அறிந்துகொள்கின்ருனே அப்போது பேரகத்

தை த்யஜிக்கின்றான். எப்போது ஸ்வர்ணமயமான தேஜஸ்ஸு டன் கூடினவனும், ஸர்வ லோககர்த்தாவும், ஸர்வலோகேச்வர னும், ஸர்வஹ்ருதயாந்தர்வர்த்தியும், ப்ரக்ருதிக்கும் காரணபூதனு மான வாஸுதேவனை ஸாக்ஷாத்கரிக்கின்றானோ, அப்போது புண்ய பாப ரூபமான உபயவித கர்மங்களாலும் விடப்பட்டவனாய்க் கொண்டு ஸர்வ ப்ரக்ருதி ஸம்பந்த விநிர்முக்தனாய் ஈச்வரனைப் போல் கேவலம் ஜ்ஞாநாநந்தமயனாக நிலைப்பான். இப்படியெல்லாம் ச்ருதி வெளியிடுகின்றது. இவ்வர்த்தங்களை இந்தத் திவ்ய தேசத் தில் எம்பெருமான் ஸேவை ஸாதிப்பது தெளிவிக்கின்றது. மேலே சொன்ன வண்ணம், ஸர்வ பந்தங்களையும் போக்கின ஜீவன், தன்னுடன் என்றும் பிரிவற்றிருக்கும் பெருமானைக் கண்டு, ஸேவித்து ஸேவித்து, ஆநந்தம் பெருகி, த்ருப்திபடாமல் இருக் கும் ஸ்திதியை யோசித்தே பகவானை இவ்வூரில் ஆராவமுதம் என்கிறார்கள். பகவான் எழுந்தருளியிருக்கும் கர்ப்ப க்ரஹம் தான் ஹ்ருதயம். ஜ்ஞாநத்தை யடைந்த ஜீவன் அங்கே சென்ற வுடன், தானும் அவனும் பிரிவற்று ஒரே ஹ்ருதயத்தில் நிற்பதைக் கண்டுகொள்கின்றான். அந்த ஜ்ஞாநத்தால் ஸம்ஸாரத்தில் பற்றை விலக்கியவன், ரஸமென்றும் அம்ருதமென்றும் ச்ருதி சொன்ன பரப்ரஹ்மத்தை எவ்வளவு தூரம் அநுபவித்தும் பர்யாப்தியைப் பொருந்தமாட்டான். இவ்வர்த்தங்களை நீ யோசிப்பாய். ப்ராக்ருத விஷயங்கள் உன் மநஸ்ஸை இனி இழுக்காமலிருக்கும்படி நீ அதை அடக்கிவரவேண்டும். உன் முழு மநஸ்ஸும் பகவானி டம் நிலைக்கட்டும். தத்காலம் அவன் உனக்கு ஏகாச்ரயமாய் நிற்கின்றான்.''

இவ்வண்ணம் சொல்லிக்கொண்டே கேசவாசார்யர், தாம் இறங்கியிருந்த இல்லம் போய்ச் சேர்ந்தனர். மற்றோரும் அவ ருடனே அவ்விடம் அடைந்தார்கள். மறுநாள் யாவரும் ஸ்ரீரங்கத் தை உத்தேசித்து ப்ரயாணப்பட்டார்கள்.

பத்ராதிபர்.

ஸ்ரீ:

# புஸ்தக விமர்சம்.

1. **அஷ்ட ப்ரபந்தம் :** — அழகிய மணவாளதாஸரென்கிற திவ்யகவி ஸ்ரீ. பிள்ளைப்பெருமாளையங்கார் அருளிச்செய்த **அஷ்டப்ரபந்தம்** என்னும் க்ரந்தம், திருவல்லிக்கேணி ஸ்ரீ. வை. மு. ஶடகோப ராமாநுஜாசார்யர், சே. க்ருஷ்ணமாசார்யர், வை. மு. கோபால க்ருஷ்ணமாசார்யர் ஆகிய இம்மூவரால் இயற்றப்பட்டுள்ள விரிவான உரையுடன் பதிப்பிக்கப்பட்டு, திருவல்லிக்கேணி தென்னண்டை மாடவீதி 19 - நெ. க்ருஹத்திலிருக்கும் ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாய புஸ்தக ஶாலையில் ப்ரதியொன்று ரூ. 3—8—0 வீதம் விற்கப்படுகின்றது என்பதை ஸ்ரீ தீபிகையைப் படிக்கும் அன்பர்களெல்லார்க்கும் இதனால் விஜ்ஞாபநம் செய்துகொள்கின்றோம். அந்தப் புஸ்தக ஶாலையின் சொந்தக்காரராயும், ப்ரக்ருத உரையை இயற்றிய மூவருள் அந்யதமராயு மிருக்கும் ஸ்ரீ. சே. க்ருஷ்ணமாசார்யர் என்னும் ஸ்வாமி, அந்த க்ரந்தத்தின் ஒரு ப்ரதியை நமக்கு மஹத்தான க்ருபையுடன் கொடுத்து, அதைப் பற்றி விமர்ஶித்து ஸ்ரீ தீபிகையில் நமது அபிப்ராயத்தை எழுத வேண்டுமென்று நியமித்திருக்கிறார்.

" லவண வணிஜ: கர்ப்பூர வார்த்தாம் கிம் து ஹி வேத்தி "

என்கிறபடி, உப்பு வ்யாபாரியை ஒத்த நாம், பச்சைக்கற்பூரம் போன்றுள்ள அந்த க்ரந்தத்தின் மஹிமையைப்பேச எவ்விதத்திலும் அநதிகாரிகளே! என்பதை நன்றாக உணர்ந்து இருக்கையிலும், நாம், அந்த ஸ்வாமியின் நியமநத்தைப் பெரிதாக எண்ணி, அதை அதிலங்கநம் செய்வது உசிதமாகாது என்னும் புத்தியினால் அந்த க்ரந்தத்தைப் பற்றி நமக்குத் தோன்றுமவற்றை எழுதத் துணிகின்றோம். அப்படி எழுதுவதில் குற்றங்கள் இருந்தால் அவற்றைப் பொறுத்தருளுமாறு பெரியோரை ப்ரார்த்திக்கின்றோம்.

ஸ்ரீ பிள்ளைப்பெருமாளையங்காரென்பவர் சோழநாட்டில் திருமங்கையென்னும் திவ்ய தேஶத்தில் சற்றேறக்குறைய எழுநூற்றறுபது வர்ஷத்து

க்கு முன்னதாக ஒரு ஸ்ரீவைஷ்ணவருடைய வம்ஶத்தில் அவதரித்தாரென்று தெரிய வருகிறது. இவரைத் 'தென்கலை வைணவர்' என்பர் புலவர் புராண நூலுடையார். ஆனால் அவரை அப்படி தென்கலை ஸ்ரீவைஷ்ணவரென்று சொல்வதற்கு அவருடைய ப்ரபந்தத்தில் யாதொரு ஸூசகத்தையும் நாம் பார்த்தவரையில் காணேம். அவர் ஆழ்வார்களின் அருளிச்செயல்களில் ஆழ்ந்து ஈடுபட்டவரென்றும், திருவரங்கம் பெரிய கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற நம் பெரிய பெருமாளுடைய திருவடித்தாமரைகளில் மிக்க பக்தி பூண்டவரென்றும் அவருடைய க்ரந்தம் விளக்குகின்றதே தவிர வேறு கலாப்ரயுக்தங்களான விஶேஷங்க ளொன்றையும் அது தெரிவிக்க வில்லை. ஆனால், அவர் காலத்திற்குப் பின்னர் அவதரித்திருக்கும் நமது வடகலை ஆசார்யர்களி லொருவரும், புகழ்ச்சிக்கு அர்ஹமென்று நமக்குப் புலப்படும் இந்த ப்ரபந்தத்தைப் புகழ்ந்து பேசியிருக்கிறரில்லை. இதைப் பார்த்தால், ஒருகால் புலவர்புராண முடையார் சொல்லியிருப்பது உண்மையோ? என்று ஒரு தோற்றமும் உதிக்கின்றது. வடகலை ஆசார்யர்கள் இதை இகழ்ந்திருப்பதையும் நாம் அறியோம்.

இவர் அருளிச்செய்திருக்கும் நூல்களாவன :— திருவரங்கத்தந்தாதி, திருவரங்கத்துமாலை, திருவரங்கக்கலம்பகம், திருவேங்கடமாலை, திருவேங்கடத்தந்தாதி, அழகரந்தாதி, நூற்றெட்டுத்திருப்பதி யந்தாதி, ஸ்ரீ ரங்கநாயகரூசல், ஆக எட்டு. அது காரணமாகவே இதற்கு 'அஷ்டப்ரபந்தம்' என்று பெயர் வழங்குகின்றது. இந்த ப்ரபந்தங்க ளெல்லாவற்றிலும், நமது ஆழ்வார்கள் அருளிச்செய்திருக்கும் திவ்ய ப்ரபந்தங்களின் ஸாரார்த்தங்களும், ஸ்ரீ நாதமுனிகள் முதலிய நமது ஆசார்யர்களுடைய திவ்யஸூக்திகளின் ஸம்ப்ரதாய ரஹஸ்யங்களும் மிகச் சீராகப் பொதிந்திருக்கின்றன வென்பதை ஒவ்வொரு ப்ரபந்தத்திலுமுள்ள ஒவ்வொரு செய்யுளும் நன்குக விளக்குகின்றது. யாத்ருச்சிகமாக எடுக்கப்பட்ட கீழ்க்கண்ட செய்யுள்களை நிதர்ஶநமாகக் காண்க.

" அண்டமடங்கலையுந்தந்து காத்த வையந்தந்தன்பால்
அண்டமடங்கலைச்செய் காரணமம்பொன் முத்தலைவான்
அண்டமடங்கலை யீர்த்தோடும் பொன்னியரங்கன்புட்கார்
அண்டமடங்கலை முந்நீர்மக ளுகப்பாகவென்றே. "

'ஸ்ரீ பகவான் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹார மென்னும் ஜகத்வ்யாபாரத்தைச் செய்வதெல்லாம் லக்ஷ்மீ பிராட்டியின் மனத்தை மகிழ்விக்குந் திருவிளையாடலேயாம்' என்னும் கருத்தையுடைய இந்தச்செய்யுள்,

“𑌸𑍍𑌵𑌸𑍍𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌰𑍍𑌦𑌿𑌶𑌤𑌾𑌦𑌶𑍇𑌷𑌜𑌗𑌤𑌾𑌂 𑌸𑌰𑍍𑌗𑍋𑌪𑌸𑌰𑍍𑌗𑌸𑍍𑌥𑌿𑌤𑍀𑌃 𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌂 𑌦𑍁𑌰𑍍𑌗𑌤𑌿𑌮𑌾𑌪𑌵𑌰𑍍𑌗𑌿𑌕𑌪𑌦𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌚 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍 𑌹𑌰𑌿𑌃 । 𑌯𑌸𑍍𑌯𑌾 𑌵𑍀𑌕𑍍𑌷𑍍𑌯 𑌮𑍁𑌖𑌂 𑌤𑌦𑌿𑌙𑍍𑌗𑌿𑌤𑌪𑌰𑌾𑌧𑍀𑌨𑍋 𑌵𑌿𑌧𑌤𑍍𑌤𑍇𑌽𑌖𑌿𑌲𑌂 𑌕𑍍𑌰𑍀𑌡𑍇𑌯𑌂 𑌖𑌲𑍁 𑌨𑌾𑌨𑍍𑌯𑌥𑌾𑌸𑍍𑌯 𑌰𑌸𑌦𑌾 𑌸𑍍𑌯𑌾𑌦𑍈𑌕𑌰𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌤𑌯𑌾 ॥”

என்னும் ஸ்ரீ கூரேஶனுடைய திவ்ய ஸூக்தியிலுள்ள ரஹஸ்யார்த்தத்தை வற்புறுத்துகின்றது.

“அக்கரவம்புனைந்தா ரயனரிடையா யிருநால்
அக்கரவம்பு மலராள் கொழுநனரங்கன் செங்கோல்
அக்கரவம்புயன்றன் மூலமென்ப தறிவித்திடான்
அக்கரவம்புவிமேல் வேழமே வெளியாக்கியதே”

‘ப்ரஹ்ம விஷ்ணு ருத்ரர் என்று கூறப்படும் த்ரிமூர்த்திகளுள் இடைப்பட்டவனை திருமால், மற்றை இருவருக்கும் ஸமன் போல விருந்துகொண்டு மெய்ம்மையை மறைக்க ப்ரயத்நப்பட்டாலும் அது கூடாமல் போய்விடுகிறதே’ என்னும் கருத்துள்ள இந்தச் செய்யுள்,

“𑌊𑌹𑍍𑌯 𑌵𑌿𑌧𑌿𑌂𑌚 𑌗𑌿𑌰𑌿𑌶𑌂 𑌚 𑌪𑍍𑌰𑌯𑌶𑍋𑌵𑌤𑌾𑌰
𑌸𑌾𑌧𑍍𑌰𑍀𑌚𑍍𑌯𑌤 𑌸𑌮𑌯𑌿𑌤𑌾𑌰𑌂 𑌤𑌵 𑌦𑍇𑌵𑌭𑌾𑌵𑌂 ।
𑌕𑌿𑌂𑌚𑍇𑌤 𑌪𑌾𑌰𑌕𑍍𑌯 𑌵𑌿𑌲𑌂𑌬𑌨𑌨𑌾 𑌰𑌵𑌿 𑌰𑌙𑍍𑌗𑌯𑌾𑌥𑌾 !
𑌸𑌰𑍍𑌵 𑌪𑍍𑌰𑌵𑌤𑍍𑌸𑍁 𑌕𑍃𑌪𑌯𑌾 𑌪𑌰𑌿𑌵𑌾𑌹 𑌨𑌾𑌥𑍈𑌃 ॥”

என்னும் ஸ்ரீ பட்டரின் திவ்ய ஸூக்தியை ஸ்மரிப்பிக்கின்றது. இன்னும் இவ்வாறு நூற்றுக்கணக்காகப் பாட்டுகளை எடுத்து நிதர்ஶநமாகக் காட்டலாம். முக்கியமாக ஸ்ரீ பகவானுடைய விபவாவதார சேஷ்டிதங்களைப் பற்றிய செய்யுள்களைப் படிக்கும்பொழுது, ‘மனம் உருகும்படி தத்வார்த்தங்களைப் பாடியிருக்கும் நமது ஆழ்வார் ஆசார்யர்களே மறுபடியும் இவ்வாறு அவதரித்தாரோ ?’ என்று நமக்கு ஒரு தோற்ற முண்டாயிற்று. இப்படிப்பட்ட அரிய க்ரந்த ரத்நங்களை ஸரியானபடி அநுபவியாமல், கழுத்தில் விழும் மாலையைப் பாம்பென்று பயந்து உதறும் குருடன்போல அவைகளை உதறிவிடும் பல பக்ஷபாதிகளையும், ‘தமிழிலும் குணம் உளதோ ?’ என்று நினைக்கும் பல அஜ்ஞர்களையும் பார்க்கும் நமக்கு அளவற்ற ஶோகம் ஜநிக்கின்றது. ஸ்ரீ பகவான் தான் இந்த ஜநங்களுக்கு நல்ல புத்தியைக் கொடுத்து அவர்களை உஜ்ஜீவிப்பிக்க வேணும்.

அதிமிதமான பாஷாஜ்ஞானமுடைய நமக்கும் இந்த க்ரந்தத்தின் மஹிமையைக் கொஞ்சம் உணரும்படி செய்தது, அதற்கு எழுதப்பட்டிருக்கும் உரையே. உரை எழுதும் பலரை நாம் அறிவோம்; பல உரைகளையும் பார்த்துளோம். கவிஹ்ருதயத்தை ஸஹ்ருதயர்களுக்கு ரஸிக்கும்படி விளக்கும் விஷயத்தில் இந்த உரையைப் போன்ற உரையை நாம் கண்டதில்லை. தாத்பர்யத்தை விளக்குவதிலும், ஸமாநார்த்தமுள்ள ஆழ்வாராதிகளுடைய பாசுரங்களை எடுத்துச் சொல்லிக் கருத்தை வற்புறுத்துவதிலும், வடமொழிகள் வருமிடத்தில் எவ்வித அபத்தமுமில்லாமல் ஸரியானபடி பொருளுரைப்பதிலும் இந்த உரை மிகச் சிறந்தது. இதை இயற்றியவர்களுடைய பெயர் தாமே இதன் மஹிமையை விளக்கப் போதுமானவை. நிதிபோன்ற இந்த ப்ரபந்தத்தின் அர்த்தம் எளிதில் எல்லாருக்கும் விளங்கும்படி எடுத்து உரைத்திருக்கும் இந்த மஹான்களுக்கு நாமெல்லாரும் மிக்க க்ருதஜ்ஞதையுள்ளவர்களாக இருக்கின்றோம்.

2. **நாலடியார் :—** சமண முனிவர் இயற்றிய 'நாலடியார்' என்னும் நூலின் ஒரு ப்ரதியும் நாம் வரப்பெற்றோம். அதுவும், கீழ்க்கூறிய திருவல்லிக்கேணி ஸ்வாமிகளாலேயே உரை எழுதப் பெற்றுள்ளது. இந்த 'நாலடியார்' என்னும் நூல், நீதி நூல்களுக்குள் மிகச் சிறந்தது என்பது ப்ராயேண எல்லாருக்கும் தெரிந்த விஷயம். சொற்செறிவு, நடைச் சிறப்பு, பொருள் நுணுக்கம், ஆழ்ந்த கருத்து முதலியன பொதிந்துள்ள இந்நீதி நூலுக்குத் தக்கவாறு, அறிவிற் பெரியவரான இந்தத் திருவல்லிக்கேணி ஸ்வாமிகள் சிறந்த உரை யியற்றி யிருக்கிறார்கள் என்று நாம் சொல்லவும் வேண்டுமோ? இப்புஸ்தகத்தின் விலை ரு. 2—0—0.

இப்புஸ்தகங்களை அபேக்ஷிப்போர், திருவல்லிக்கேணி தென்னண்டை மாடவீதி, 19-ம் நெ. வீட்டிலிருக்கும் ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாய புஸ்தகசாலைக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

மயிலாப்பூர்,<br>22-11-16. } **எஸ். வாஸுதேவன்.**

# ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை.

## (ஸ்ரீ ர ங் க ம்.)

ஸ்ரீரங்கத்திலுள்ள ஆஸ்திக மஹான்களின் பெரு முயற்சியால் 1916ஸு டிஸம்பர்மீ 2உ ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்ரீ மணவாள மாமுனிகள் ஸந்நிதி ஸ்ரீமத் பரமஹம்ஸ சடகோப ராமாநுஜ ஜீயர் அவர்கள் அக்ராஸநத்தின் கீழ் ஸ்ரீ வைஷ்ணவ மஹா ஸங்கம் ஒன்று கூடிற்று. அப்போது ஷை ஸபையாரின் ப்ரார்த்தநையின் பேரில் ஸ்ரீரங்கத்தில் விஜயம் செய்திருந்த மைஸூர் ஸ்ரீமத் உ. வே. வித்யாபூஷணம் வேதாந்தரத்நம் ஆள்கொண்டவல்லி கோவிந்தாசார்ய ஸ்வாமிகள் செய்தருளிய உபந்யாஸத்தின் ஸங்க்ரஹம் :—

'ஸ்ரீவைஷ்ணவம்' என்பது ஶ்ருதி ஸ்ம்ருதி இதிஹாஸ புராணங்களில் ப்ரதிபாதிக்கப்பட்டுள்ள ஸநாதந தர்மமாகுமென்று அவ்வற்றிலுமுள்ள ப்ரமாணங்களைக்கொண்டு விளக்கியும், த்ரிவித மதாசார்யர்களால் செய்யப்பட்ட க்ரந்தங்களிலும் ஸ்ரீ வைஷ்ணவம் ப்ரபலமாக எடுத்துரைக்கப்பட்டிருப்பதை த்ருஷ்டாந்த பூர்வமாக விளக்கியும், ப்ரத்யக்ஷ ஸித்தமாய் உலகமெங்கும் ஸ்ரீ வைஷ்ணவம் பரவியிருப்பதென்பதை வெளிநாடாகிய அமெரிக்கா கண்டத்தில் மெக்ஸிகோ முதலான பலவிடங்களில் அர்ச்சாவதார எம்பெருமான்களாகிய ஸ்ரீராமன், ஸீதாபிராட்டியார் முதலாகிய திவ்ய மங்கள மூர்த்திகள் நிக்ஷேபமாயிருந்து கண்டெடுக்கப்பட்ட வரலாற்றையும், பார்ஸீ, மகம்மதீயம் முதலான மதக்ரந்தங்களில் வேத வேதாங்கங்களில் ப்ரதிபாதிக்கப்பட்ட விபவாவதாரங்களின் அழகிய பெயர்கள் ப்ரயோகிக்கப்பட்டுள்ளனவென்பதை அந்நாமங்களின் ஒற்றுமை நயத்தால் தெள்ளென எடுத்துக் காட்டியும், பண்டித ஸ்த்ரீ பாலர்கள் யாவரும் அறிந்து விஶ்வஸிக்கும்படி உபந்யஸித்தார்கள். ஆகவே இத்தகைய மேன்மையுற்ற ஸநாதந தர்ம மார்க்கத்தை அவலம்பித்து ஒழுகும் ஸ்ரீ வைஷ்ணவர்கள் இக்காலத்தில் அபிப்ராய பேதங்களை முன்னிட்டவர்களாய்க்கொண்டு தமக்குள் ஒற்றுமை இல்லாததுபற்றிக் கழிவிரக்கம்கொண்டு, இனி இப்படி காலத்தை வீணாகப் போக்காமல் ஒருமித்து ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்தை யநுஸரித்துப் பக

வர் முகோல்லாஸகரமாய் வாழ ப்ராப்தமாம்படி வர்த்தித்தல் முக்யமென்றும், அதற்கு இப்ரதாந க்ஷேத்ரத்தில் ஓர் ஸ்ரீ வைஷ்ணவ ஸபை ஏற்பட்டு நடந்தேறினல் மிக்க ஸாதகமாயிருக்குமென்றும் வற்புறுத்தி ஸாதித்ததன் மேல், ஸபையில் எழுந்தருளியிருந்த ஆஸ்திக ஶிரோமணிகள் அனைவராலும் அதுவே உசிதம் என்று ஆமோதிக்கப்பட்டு, 'பாரதீய ஸ்ரீ வைஷ்ணவ ஸபை' என நாமம் கொண்டதோர் ஸபை ஸ்தாபிக்கப்பட்டது. அச்சபையின் நோக்கங்களாவன :—

i. ஸ்ரீ வைஷ்ணவ மதத்தைச் சார்ந்த விஷயங்களைக் கற்பிக்க ஓர் ஸம்ஸ்க்ருத பாடஶாலையை ஸ்ரீரங்கத்தில் ஸ்தாபித்தல். அதற்குரிய விஷயங்களை ஏற்பாடு செய்வதற்கென்றே கமிட்டி ஒன்றை ஏற்படுத்துதல்.

ii. பாடஶாலா ஸ்தாபநமாகும் மஹத்தான கார்யம் ஸாத்யமாகும்வரையில், அச்சபையார் ஸ்ரீ வைஷ்ணவ மத ஸித்தாந்தத்துக்குரிய மற்றை விஷயங்களைக் கவனித்தல். அவையாவன :— 1. உபந்யாஸம். 2. வாக்யார்த்தம். 3. ஸம்ஸ்க்ருதத்திலும் ஸ்வதேஶ பாஷைகளிலும் பத்ரிகாப்ரசுரம் இவை முதலியன.

iii. இந்தியாவில் வியாபித்திருக்கும் மற்றை ஸ்ரீ வைஷ்ணவ ஸபைகளோடு இது ஐகமத்யம் செய்வதுடன், சென்னையில் விளங்கிவரும் 'ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபை' யுடன் சேர்ந்து, அச்சபையோரால் நடத்தப்படும் 'ஸ்ரீ வேதாந்த தீபிகை' என்னும் பத்ரிகை மூலமாக ஷை ஸ்ரீரங்கம் ஸபையின் நடவடிக்கைகளை ப்ரசுரித்தல்.

iv. அநேக ஏட்டுப்ரதிகள், அச்சிட்ட புத்தகங்கள், மற்றும் அகப்படக்கூடிய புராதந க்ரந்தங்கள்-இவைகள் அடங்கிய புத்தகசாலை ஒன்றை ஸ்தாபித்தல்.

v. ஸபை நடத்துவதற்கென்றே, நாளாவர்த்தியில், ஓர் கட்டிடத்தை அமைக்க ஏற்பாடு செய்தல் முதலியன.

---

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# இவ்வருஷத்திய மஹாஸங்கம்.

**ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை அங்கத்தினர்களுக்கு:—**

சென்ற ஸஞ்சிகையில் விஜ்ஞாபநம் செய்துகொண்டபடி, இவ்வர்ஷத்திய மஹாஸங்கத்தை, சென்னை மயிலாப்பூரிலேயே, ஸ்ரீ கேஶவப் பெருமாள் ஸந்நிதி வீதியிலுள்ள ஸ்ரீ நிகமாந்த மஹாதேஶிகன் மண்டபத்தில், நிகழும் மார்கழி௴ 13, 14, 15-ம் தேதிகளில் நடத்தவேண்டுமென்று அதன் நிர்வாஹகர்கள் நிஶ்சயித்திருக்கிறார்கள். சென்னை ஹை கோர்ட் ஜட்ஜ் மகாகனம் பொருந்திய ஸ்ரீ. உப. கே. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் ஸ்வாமி, முதல் தினத்தில் அக்ராஸநாதிபதியாக இருந்து ஸதஸ்ஸை அலங்கரிக்க க்ருபையாக அங்கீகரித்திருக்கிறார். பல விடங்களிலிருந்து அநேக வைதிக வித்வான்களும் லௌகிக ஆஸ்திகர்களும் அக்காலத்தில் இவ்விடத்தில் ஸந்நிஹிதர்களாக இருந்து வேதாந்த வாக்யார்த்த விசாரம் செய்வதாகவும் உபந்யாஸங்களைச் செய்வதாகவும் திருவுள்ளம்பற்றி யிருக்கிறார்கள். இந்தத் தீபிகையைப் படிக்கும் அன்பர்களும் அப்பொழுது இவ்விடத்திற்கு எழுந்தருளி ஸதஸ்ஸை அலங்கரிக்க க்ருபை செய்யவேணுமென்று விநயத்துடன் ப்ரார்த்திக்கிறோம்.

குறிப்பிட்ட மூன்று தினங்களில் உபந்யாஸங்கள் நடைபெறும் க்ரமம் பின்வருமாறு வ்யவஸ்தை செய்யப்பட்டிருக்கின்றது.

மயிலாப்பூர்,
நள௵
மார்கழி௴ 1௳.

டி. கோதண்டராம ஐயங்கார்.
எஸ். வாஸுதேவன்.
கார்யதர்ஶிகள்.

---

## ஆறாவது ஸ்ரீ வைஷ்ணவ மஹாஸங்கம்.

(நள௵ மார்கழி௴)

**13௳ புதன்கிழமை.**

பகல் 2 - மணி — i. ஸ்வாகதம்: ராவ் பஹதூர் ஸ்ரீ. உப. எஸ். ராமஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி.

ii. அக்ராஸநாதிபதியின் உபந்யாஸம்.

iii. "பாஞ்சராத்ரமும் ஸ்ரீ வைஷ்ணவ ஆசாரமும்": ஸ்ரீ. உப. டி. ராஜகோபாலாசார்ய ஸ்வாமி.

iv. "ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயம்": ஸ்ரீ. உப. சதுஸ் ஶாஸ்த்ர வித்வான் ஶேஷாசார்ய ஸ்வாமி.

இரவு 7-30 மணி — ஹரிகதை: "திருமங்கை மன்னன் சரித்ரம்": ஸ்ரீ. உப. எம். கே. தாதாசார்ய ஸ்வாமி.

---

## 14உ வியாழக்கிழமை.

காலை 8 - மணி — i. அங்கத்தினர்களின் ஸங்கம்.

ii. ஸ்ரீ வேதாந்த வாக்யார்த்தம் — ஸ்ரீ. உப. வித்வான் சேட்லூர் நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ. உப. வித்வான் புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ. உப. வித்வான் இஞ்சிமேடு ரங்கநாதா சார்ய ஸ்வாமி முதலிய பண்டிதர்கள்.

பகல் 2 - மணி — i. "ஆர்யாப்யுதயம்" ஸ்ரீ. உப. டி. ஈ. ஶடகோபா சார்ய ஸ்வாமி.

ii. "ஹம்ஸ ஸந்தேஶம்": ஸ்ரீ. உப. எம். கே. தாதா சார்ய ஸ்வாமி.

iii. "விஶிஷ்டாத்வைதம்": ஸ்ரீ. உப. வித்யா பூஷணம் எ. கோவிந்தாசார்ய ஸ்வாமி.

இரவு 8-30 மணி — "ஸ்ரீ பாகவதம்": ஸ்ரீ. உப. வித்வான் மலையாங் குளத்தூர் குப்புஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி.

---

## 15உ வெள்ளிக்கிழமை.

காலை 8 - மணி — ஸ்ரீ வேதாந்த வாக்யார்த்தம்: வித்வான்கள்.

பகல் 2 - மணி — i. "ஸ்மார்த்த ஸம்ஸ்காரங்கள்": ஸ்ரீ. உப. வித்வான் தட்டை ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி.

ii. "உபய வேதாந்தமும் மணிப்ரவாள நடையும்": ஸ்ரீ. உப. பண்டிதர் தி. வெங்கடராமய்யங்கார் ஸ்வாமி.

iii. ஸ்ரீ. உப். ப்ரொபெஸ்ஸர் எஸ். க்ருஷ்ணஸ்வாமி ஐயங் கார் ஸ்வாமியின் உபந்யாஸம்.

iv. ஸபாத்யக்ஷர் ஸ்ரீ. உப. டி. டி. ரங்காசார்ய ஸ்வாமி யின் நிகமநம்.

இரவு 8-30 மணி — ஹரி கதை: "பாதுகா பட்டாபிஷேகம்": ஸ்ரீ. உப. கே. ராமஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி.